# சுதந்திரன்
SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO-12

வாரப்பதிப்பு விலேசதம் 15



USHA உஷா
மின்சார விசிறிகள்

| | | |
|---|---|---|
| சிலிங்பான் | 56" | ரு 240 |
| ,, | 48" | ரு 235 |
| ,, | 36" | ரு 210 |
| பெடஸ்டல் | 16" | ரு 215 |
| மேசை (Table) | 16" | ரு 160 |

சோல் ஏஜண்டு:- G. H REIMOO



புத்தகம் 6 நந்தன ஸ்ரீகார்த்திகை மீ 29உ [14-12-52] ஞாயிற்றுக்கிழமை ரபீஉல் அவ்வல்பிறை 26 இதழ் 28


# ★ சடளுளிகளான அரசாங்க சிப்பந்திகள்

## உத்தியோகம் இழக்க நேரிடும்

## சட்டப் அமுல் நடைபெறுவது மீண்டும் நிறுத்திவைக்கப்படுமா? ●

(நமது நிருபர்)

அரசாங்க சிப்பந்திகளின் கடன் சம்பந்தப்பட்ட சட்ட விதிகள் அமுல் நடைபெருவணணம் தற்காலீக மாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் காலத்தை மேலும் நீடிட்பதற்கு பொக்கிஷ இலாகா மறுத்து விடுமர்யின் கடன் பட்டிருக்கும் அரசாங்கச் சிப்பந்தி களின்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்'

சட்டத்தை அமுல் நடத் தாது நிறுத்தி வைக்கப்பட் டிருக்கும் காலம் இவ்வரு டம் டிசம்பர் மாதத்தோடு முடிவடைகிறது'

### பொய்யான வாக்குறுதி

நிர்வாக சட்ட விதிகள் 291ம் 300ம் சிப்பந்திக ளின் கடனேட்பற்றிக் கூறு கிறது. இச்சட்டத்தின்படி தான் கடன் காரனல்ல என்று ஒவ்வொரு சிப்பந்தி யும் உறுதிப் பத்திரம் கொ டுக்காவிட்டால், அவரு டைய சேவைக்காக "பென் ஷன்" பெற அருகதை அற் றவராகிவிடுவார். பொய் யான உறுதி பத்திரம் அளித்தவர் தனது வேலே யை இழந்துவிடுவார்

குற்றமெனக் கருதக் கூடிய வழிகளில் பணம் சம்பந்தப்பட்ட வரையில் இம்மாதிரியான சங்கடங் களே ஏற்படுத்துவது அவர் கள்மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும், அவர் களின் பொறுப்புகளேயும் பாதிக்குமாதலால், அதைக் குற்றமெனக் கொண்டு பொது சேவையில் அவர் களுக்குள்ள கௌரவமான அந்தஸ்து பறிமுதல் செய் யப்படுமென்பதுதான் சட் டம் அதனல் அவர்களின் பதவியும், சம்பளமும் உய ரக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்காது போய்விடும்' மீண்டும் அந்தப் பணச் சங்கடத்திலிருந்து விடு படும்வரை அவர்களுக்கு பிரஸ்தாப சலுகைகள் கிடைக்காது'

### சம்பளம் ஈடு

சம்பளத்தை ஈடாகமா கக் கொண்டு சிப்பந்திகள் பணம் கடன் வாங்குவதை இச்சட்டம் கடுமையாகத் தடை செய்கிறது. சம் பளத்தை ஈடாக வைத்து பணம் கடன்வாங்குவது வேலேயினின்று நீக்கப்படக் கூடிய குற்றமாகும்,

அரசாங்க சிப்பந்திகள் "பிரொமிஸரி" நோட்டு களில் கையெழுத்திடுவதும தடை செய்யப்பட்டிருக் கிறது.

இந்தப் பிரச்னேயைப் பொக்கிஷ இலாகா இம் மாதம் புனராலோசனே செய்யும்: கடன் படாதவர் களுக்குமட்டுமே அரசாங்க உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்ற ஓர் திட் டம் சமர்ப்பிக்கப்பட்டிருப் பதாக "சுதந்திர" னுக்கு செய்தி கிடைத்திருக்கி றது.

### ஐந்து ஆண்டுகள்

பிரச்னே முழுவதும் புன ராலோசனே செய்யப்படு மென்றும், சட்டத்தை நிறுத்தி வைத்திருக்கும காலத்தை நீடிப்பதுதான் கிடைக்கக் கூடிய ஒரு சலு கை என்றும் பொக்கிஷ இலாகா அதிகாரி ஒருவர் கூறினர்.

நிதிமந்திரியின் வேண்டு கோளின்மீது 1950 செப் டம்பர் மாதம் பிரஸ்தாப சட்டத்தை அமுல்நடத்துவ துநிறுத்திவைக்கப்பட்டது.

கடன் சம்பந்தப்பட்ட விசேஷ கமிட்டி இச்சட் டம் 5 வருடங்களுக்கு நிறுத்தி வைக்கப்படவே ண்டுமென்று சிபார்சு செய்தது.

### திரிகோணமலேயில் பொதுக்கூட்டம்

வட இலங்கையில் புய லின் கொடுமைக்கு ஆளா னவர்களுக்கு திரிகோண மலே மக்கள் எத்தகைய உதவிகள் செய்ய முடியும் என்பதை ஆலோசிப்பதற் காக இம்மாதம் 13ந் தேதி ஹிந்து கல்லூரி மண்டபத் தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும்.

## பாதுகாப்பு பிராந்தியங்களே அபிவிர்த்தி செய்தல்

### நிர்வாகசபைகளேநிறுவபுதியசட்டம்

பாதுகாப்பு ஸ்தலங் களே அடுத்துள்ள பிராந்தியங்களே அபிவிருத் திசெய்வதற்காகவும், நிர்வ கிப்பதற்காகவும் நிர்வாக சபைகளே நிறுவும் பொரு ட்டு அரசாங்கம் சமீபத்தில் சட்டம் இயற்றுமெனத் தெரிகிறது

பட்டின சபைகளுக்கு ள்ள அதிகாரங்களேக்கொ ண்ட பிரஸ்தாப நிர்வாக சபைகளில் ஏழு அல்லது எட்டு உறுப்பினர்கள் அங் கம் வகிப்பார்கள் 3 பேர் ராணுவ அதிகாரிகள், 3 பேர் அரசாங்க அதிகாரி கள் 2 பேருக்கு மேற்படா மல் ஸ்தலஸ்தாபன மந்திரி யால் நியமனம் செய்யப் பட்ட பொதுஜனப் பிரதி நிதிகள் ஆகியோர் அச் சபைகளில் உறுப்பினர்க ளாயிருப்பார்கள

நிர்வாக சபைகளே நிறு வும் திட்டம் மந்திரி சபை யால் ஏற்கனவே அங்கீகரிக் கப்பட்டு, நகல மசோதா தயாரிக்குமாறு உத்தரவி டப்பட்டிருக்கிறது

பாதுகாப்பு ஸ்தலங்களு ள்ள பிராந்தியங்களில் அல் லது அப்பிராந்தியங்களின் முக்கியமான பகுதிகளில் பிரஸ்தாப நிர்வாக சபை களே நிறுவுவதற்காக உத் தேசிக்கப்படும் சட்டம் ஸ்தல ஸ்தாபன மந்திரிக்கு அதிகாரம் அளிக்கும்.

இச்சட்டத்தின்படி அத ற்கான மந்திரியின் ஒவ் வொரு உத்தரவும பாரா ளுமன்றத்தினதும, செனட் சபையினதும் அங்கீகாரம் பெறவேண்டியது அவசிய மாகும்.

நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு இலங்கை ராணுவத்தினர் பராமரிக் கும் அல்லது உபயோகிக் கும் கட்டடங்களேயும் அது சம்பந்தமான ஏனேய அமை ப்புகளேயும்தான் "பாது காப்பு ஸ்தலங்கள்" என்று கூறுவதென மந்திரி சபை முடிவுசெய்திருக்கிறது

இச்சட்டத்தைப் பாரா ளுமன்றம் அங்கீகரிக்குமா யின், நிர்வாக சபையின் கீழ் கொண்டுவரப்படும் முதலாவது பிராந்தியம் ஹேமாகமையை அடுத்து ள்ள பனகொடையாக இருக்குமென்று [illegible]

## நாடெங்கும் பகிரங்க பஸ் விசாரணே

### பிரயாணிகள் குறைகளேக் கூறலாம்

"சுதந்திரன்" செய்த கிளர்ச்சியின் விளேவாக புதிய வருடத்திற்கு "பஸ் லேசன்ஸ்" கொடுக்க முன்பு பஸ்பிரயாணிகளின் குறைகளேயும், கருத்துகளேயும் அறி யும் பொருட்டு பகிரங்க விசாரணே நடத்த ஏற்பாடு செய் யப்பட்டிருப்பதாக மோட்டார் போக்குவரத்துக் கமிஷ னர் திரு ஸி· பி பெரேரா ஒரு 'கெஸட்' அறிக்கை மூலம் தெரிவிக்கிருர்.

யாழ்ப்பாணம், அனுரா தபுரம், குருணுக்கல் ஆகிய இடங்களில் இம்மாதம் பஸ் போக்குவரத்தைப் பற்றி பொது விசாரணே நடைபெ றும்

கொழும்பு நகர பஸ்போ க்குவரத்தைப் பற்றி 5நாட் கள் விசாரணே நடத்த ஏற் பாடு செய்யப்பட்டிருக்கி றது. இவ்விசாரணே ஜனவ ரிமாதம் 12, 13, 26, 27, 28 ந் தேதிகளில் நடைபெறும். மோட்டார் போக்குவரத் துச் சட்டம் 53 விதியின் படி விசாரணேயின் போது சாட்சியமளிக்க யாரை வேண்டுமானுலும் கமிஷ னர் அனுமதிக்கலாம்.

குருணுகல்லில் டி· ஆர் ஓ. அலுவலகத்தில் டிசம்பர் 15ந்தேதி காலே 9ம ணிக்கு பஸ்விசாரணே நடை பெறும்

அடுத்த விசாரணே அனு ராதபுரம் கிறைச்சேரியில் டிசம்பர் 18ந்திகதி காலே 9 மணிக்கு ஆரம்பமாகி 20ம் தேதிவரை நடைபெறும்.

யாழ்ப்பாண மக்களுக்கு பஸ் போக்குவரத்தைப் ப ற்றி தங்களின்குறைபாடுக ளேத்தெரிவித்துக் கொள்ள டிசம்பர் 22 தேதி முதல் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இந்த விசாரணே யாழ்ப்பா ணம் கிறைச்சேரியில் டிசம் பர் 22 23. 26· 27, 29 ம் தேகளில் நடைபெறும்.

மோட்டார் வாகனப் போக்கு வரத்துக்கமிஷனர் நவம்பர் 14ந் தேதி கெஸட் டில் பிரஸ்தாப விசாரணே சம்பந்தப்பட்ட விபரங்களே பிரசுரித்திருக்கிருர்·

அந்தந்தப்பிராந்தியங்களி ல்இது விஷயமாகப்பிரசார ம்செய்யப்படுமென்று அந்த இலாகா அதிகாரியொருவர் 'சுதந்திரன்' நிருபரிடம் கூறினர்.


## அமிர்தா வாய்வு சூரணம்

இது சகலவிதமான வாய்வு தொந்தரவு, வயிற்று வலி, புளிச்சஏப்பம், வாந்தி அஜீரணம், இடுப்புவலி, முதுகுவலி, பசியின்மை, சூதகவயிற்றுவலி, இருமல், இளேப்பு, ஆஸ்தமா முதலிய வியாதிகளுக்குநிச்சயநிவா ரணி. கர்ப்பஸ்திரீகளுக்கோர் நல்ல மருந்து.

டின் விலே ரு 2-00. தபால செலவு வேறு.

## நேத்திரா அமிர்த தைலம்

இதை நாள்தோறும் பாவித்துவந்தால் பீனிஸம், ஒருதலேவலி, பித்தக் கிறுகிறுப்பு, தூக்கமின்மை, மாலேக்கண், கண்கூச்சல், கண்ணெரிச்சல், நீர் வடி தல் முதலிய வியாதிகள் சுகமாகும். அளவுக்கு மிஞ் சிய உஷ்ணத்தை தணிக்கும். கண்களுக்குப் பிரகா சத்தையும், கூந்தலே அழகாகவும், கறுப்பாகவும் வளரச் செய்யும்

12 அவுன்ஸ் புட்டி விலே ரூபா 4-50.
6 அவுன்ஸ் புட்டி விலே ரூபா 2-50.
தபால் செலவு வேறு.

T. K.(டி. கே.) "மார்க்" இருக்கிறதா என்பதைப் பார்த்து வாங்குங்கள்

## செல்லராஜா அன் கோ.

பாக்கியலெக்ஷிமி வைத்தியசாலே
170, செட்டியார் தெரு, கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்புப் பேச்சு

# போலீஸ்காரிகள்மீது டிரைவர்களின் கண்ணோட்டம்!


# கமலா பப்படம்

ரிஜிஸ்டர்ட் நிர். 13207

லீலா:- என்ன நீலா, முன்னைவிட ரொம்பவும் இளைத்திருக்கின்றாயே?

நீலா:- என்னவோ அம்மா? வரவர சரியாக உணவே சாப்பிட முடியவில்லை. நாவுக்கு ருசி இருந்தால்தானே?

லீலா:- பூ......இதுதானா பிரமாதம்? தினமும் ஆகாரத்தில் கமலா பப்படத்தைச் சேர்த்துக்கொள். அதன் குணமும், மணமும், ருசியும் உன்னை எவ்வளவு அபிவிருத்தி செய்கிறதென்பது தெரியும்.

Proprietor: பி. எம். ஹமீது,

197, கெய்ஸர் வீதி, கொழும்பு



அன்புள்ள ஐயா!

தாங்கள் அனுப்பிய எஸ். பி எஸ் பதிமருந்தால் சகல வியாதிகளிலிருந்தும் பூரண சுகமடைந்தேன். மற்றும் பலர் இம்மருந்தினால் நல்ல சுகமடைந்திருக்கிறார்கள்.

ஆகையால் இம்மருந்தை உற்பத்தி செய்பவர்களுக்கும், தங்களுக்கும் எனது நமஸ்காரம்

இப்படிக்கு,
எஸ். சொள்ளமுத்து கங்காணி.
விக்லோ ஹில்ஸ்,
போவிட்டியமுல்லை டிவிஷன்,
வண்டுரம்பை போஸ்ற்று, 17-6-52.




இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றது

## எஸ். பி. எஸ். பதி மருந்து

### இதனால் தீரும் நோய்கள

ஜுரம் தலைபாரம் தலைவலி தலைசுற்றல் சளி இருமல் க்ஷயம் அஜீரணம் அஜீரண வயிற்றோட்டம் புளியேப்பம் மந்தம் வயிற்றுப்போக்கு வயிற்றிரைச்சல் வயிற்றுவலி வயிற்று உப்பிசம் பசியின்மை வாய் நாற்றம் இழுப்பு ஜன்னி காக்கைவலிப்பு பித்தரோகம் பெலவீனம் அசதி காமாலை கைகால் பிடிப்பு பாரிசவாய்வு அண்டவாய்வு குத்தல் எல்லாவித வாதரோகங்கள் பிளேக் காலரா இன்புளுயன்சா ஸ்திரீகளுக்கு உண்டாகும் சூதகவாய்வு சூதகஜன்னி சூலைக்கட்டு குழந்தைகளுக்கு மாந்தம் வயிற்றோட்டம் ஜன்னி, ஜலதோஷம் கக்குவான், இருமல் இவைபோன்ற சகல வியாதிகளுக்கும் கைகண்டமருந்து.

இந்த ஒரே மருந்து சகல வியாதிகளையும் குணமாக்குகிறது. உள்ளும், புறமும் உபயோகிக்கலாம். ஒவ்வொரு புட்டியிலும் உபயோக விபரம் அடங்கியிருக்கிறது.

**இம்மருந்தை லட்சக்கணக்கானமக்கள் உபயோகித்து சுகமும், சுபீட்சமும் பெற்றுள்ளனர்.**

குறைந்த விலை! நிறைந்த குணம்

**புட்டி 1க்கு ரூ.1-25.** தபால் செலவு வேறு

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

கவனிப்பு:- எங்கள் எஸ். பி. எஸ். பதிமருந்து வாங்குபவர்கள் ஏழு முக முத்திரை இருக்கிறதா என்று கவனித்துப்பார்த்து வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தயாரிப்பவர்கள்:- எஸ். பி. எஸ். ஜெயம் அன் கோ,

வேல் கெமிக்கல் ஒர்க்ஸ், மதுரை.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:—

**எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ,**

34, செட்டியார்தெரு, கொழும்பு 11.

ஹெட் ஆபீஸ்:- 193, காலி ரோடு, கொள்ளுப்பிட்டி கொழும்பு.

Telephone: 6019
Telegram: Jayajeevi Colombo


## பிரஜாவுரிமைச் சட்டத்திற்கு மகா பிக்குகளும் பலி?

ஐந்து பெண் போலீஸார் அடுத்த ஜனவரியிலிருந்து போலீஸ் சேவகம் செய்யப்போகிறார்களாம். இன்னும் அதிகமான பெண்களைப் போலீஸ் படையில் சேர்க்க ஏற்பாடுகள நடைபெறுகின்றனவாம் போலீஸ் இலாகாவில் ஆட்சியாளர் செய்திருக்கும் 'புரட்சி'தான் இது. யு. என். பி. ஆட்சியில் ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் சம உரிமை உண்டென்று நிரூபிப்பதற்கோ அல்லது போலீஸ் நாய்களைக்கொண்டு துப்புத் துலக்கவேண்டிய அவசியம் இல்லாமலே குற்றவாளிகள் பெண் போலீஸாரிடம் தானாகவே வந்து சரணடைந்துவிடுவார்களென்ற எண்ணத்திலேயோ இப்புரட்சியைச் செய்திருக்கின்றனர். அவர்களுக்குப் பொருத்தமான உடையும், பெயரும் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லையாம்.

### பெயர்

பெயர் அதிகார பூர்வமாக நிர்ணயிக்கப்படும் வரை நாம் அவர்களை "போலீஸ்காரிகள்" என்று அழைப்போம்.

போலீஸ்காரிகளைப் பற்றி பலர் பலவிதமாகப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களுக்கு காரியாலய வேலையைத் தவிர வேறு வேலை கொடுக்கக்கூடாதென்று பல சந்தேகப் பிராணிகள் கூறுகின்றனர்.

### கார் ஓட்டிகள்

நமது போலீஸ்காரிகள் ஐவரும் யுவதிகள். அவர்கள் ரஸ்தாக்கள் சங்கமமாகும் நடுச் சந்திகளில் நின்று இரு கைகளையும் நீட்டி அங்குமிங்கும் காட்டி வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த ஆரம்பித்துவிட்டால், போக்குவரத்து சீர்படுவதற்குப் பதிலாக சீர்குலைந்து விபத்துகள்கூட ஏற்படலாமென்று அஞ்சப்படுகிறது. ஏனெனில், வாலிப வயதுள்ள டிரைவர்கள் போலீஸ்காரிகள் மீது வைத்த கண்ணை வாங்காமல் மதி மயங்கி கார்களை ஓட்டிக்கொண்டு போகக்கூடும். அதனால் வண்டிகளும், கார்களும் மோதி ஏக களேபரம ஏற்படுவதோடு உயிர்ச்சேதமும் ஏற்படலாம். இக்காரணத்தை முன்னிட்டு அமெரிக்காவில் ஒரு நகரத்தில் அரை நிர்வாண உடைகளுடன் காட்சியளிக்கும் யுவதிகளின் படங்கள் அச்சடிககப்பட்ட சினிமா விளம்பரங்களை சுவர்களில் ஒட்டக்கூடாதென்று நகர சபை தடைவிதித்திருக்கிறதாம். ஆதலால் போலீஸ்காரிகளால் இப்படிப்பட்ட ஆபத்து ஏற்படக்கூடாதே என்று கவலைப்படுகிறோம்.

### காலிகள்

மேலும், இந்த போலீஸ்கார யுவதிகள் தங்களின் சேவையை முன்னிட்டு தெருக்களிலும், சந்துகளிலும் இரவு நேரங்களில் சுற்றிவர ஆரம்பிப்பாராகில் தெருக்களில் அரட்டையடித்துகொண்டு அலைந்துதிரியும் வாலிபர்களிடம் சிக்கிவிடக்கூடிய அபாயம் ஏற்படலாம் அப்பொழுது அவர்கள் தங்களின் "போலீஸ் தனத்தைக்" காட்டி அக்காலிகளிடமிருந்து தப்பிவிட முடியுமென்று நாம் நம்பவில்லை. முன்பு ஒரு தடவை பம்பாயில் ஒரு போலீஸ்காரியை பலாத்காரம் செய்த சம்பவம் ஒன்று கோர்ட்வரை சென்று சந்திசிரிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டதாம்.

❀

### புத்தபகவானின் சீடர்கள்

புத்த பகவானின் பிரதான சீடர்களான சாரிபுத்த, மொகல்லான என்ற இரு மகா பிக்குகளின் புனித அஸ்திகள் சாஞ்சியில் புதிதாக கட்டப்பட்ட விகாரத்தில் நேருஜியால் கடந்த வாரம் புனர் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இலங்கையிலிருந்து மந்திரி ரத்னாயக்கா உட்பட நூற்றுக்கணக்கான சிங்கள பௌத்தர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டார்கள்.

### விஸிட்டர்

முதலில் இந்த அஸ்திகளை இலங்கையில் பிரதிஷ்டை செய்ய முயற்சிகள் செய்யப்பட்டனவென்றும், ஆனால் அந்த பிக்குகள் இலங்கைப் பிரஜைகளல்ல என்ற காரணம் சுட்டிக்காட்டப்பட்டதால் பிரஸ்தாப முயற்சிகள் பயனளிக்கவில்லையென்றும் பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கரைத்துக் குடித்த ஒரு தர்க்கவாதி கூறுகிறார் புத்தரே இரு தடவைகளிலும் "விஸிட்டராக தான்" இலங்கைக்கு விஜயம் செய்தாரென்பதை அவருடைய கூற்றுக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார் புத்தர் காலத்தில் வாழ்ந்த சாரிபுத்த, மொக்கல்லான ஆகிய இருவரும் ஒரு தடவைகூட இலங்கைக்கு விஜயம் செய்யவில்லையென்றும் அவர்கள் 100 சதவீதம் இந்தியர்களென்றும், ஆகவே அவர்களின் அஸ்திகளை இந்நாட்டில் பிரதிஷ்டை செய்ய அனுமதிப்பது சட்ட விரோதமென்றும் அவர் தெளிவுபடுத்துகிறார். அத்தோடு மற்றொரு ஆதாரத்தையும் எடுதது வீசுகிறார்.

### மஹிந்த

மஹிந்த ஸ்வாமியின் அஸ்திகளை இந்தியாவுக்கு தரிசனத்திற்காக அனுப்ப ஏற்பாடுகள் நடைபெறுகிறதல்லவா? தர்மாசோக அரசனின் புதல்வன் மகிந்த பிக்குதான் இலங்கைக்கு புத்த மதத்தைக் கொண்டு வந்தவர். அவர் இந்நாட்டிலேயே காலமாகிவிட்டார்.

மஹிந்த ஸ்வாமி 1936 முதல் (அவர் ஓர் பிரமச்சாரி) இந்நாட்டில் வசித்திருக்கவில்லை ஆகவே பிரஜாவுரிமைச் சட்டப்படி அவர் இலங்கைப் பிரஜையல்ல மேலும் சட்டபூர்வமாக "விஸிட்டர்" விஸா வாங்கிவந்தவருமல்ல, திருட்டுத்தனமாக கேசரி மார்க்கமாக வந்து இந்நாட்டில் குடியேறினவர். (அதாவது கள்ளத்தோணிக்காரர்) ஆகவே அவர் நாடுகடத்தப்படவேண்டியவர். ஆனால் அதிர்ஷ்டவசமாக அவர் இறந்து போய்விட்டதால் அவருக்குப் பதிலாக அவருடைய அஸ்திகளை இந்தியாவுக்கு நாடு கடத்தப் போவது சட்டபூர்வமான

(12-ம் பக்கம் பார்க்க)

## வானில் புரட்சி



இது ஒரு ராக்கட் விமானம். ஏனைய விமானங்களை விட மிக உயரத்தில் பறக்கக்கூடியது. இதன் முகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் ஊசி முனை எத்தகைய விமானத் தாக்குதலையும் தவிடுபொடியாக்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகி சுத்தானந்த பாரதியார்

# கருத்து வேற்றுமையை மதிப்பது தமிழ்ப் பண்பு

-----o-----

## அன்பர்களின் அபிப்பிராயங்கள்

சுத்தானந்த அடிகளைப் பற்றித் 'தமிழ்நாடு' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைக்கு ஒரு நண்பர் எழுதியிருந்த மறுப்பைத் தங்கள் சுதந்திரனில் படித்தேன்.

அடிகளின் சமயக் கருத்துக்களைப் பற்றி ஒரு வார்த்தை. எங்கெந்த சமயத்தவர் அதிகமாகக் கூடியிருக்கின்றனரோ அந்தந்த சமயங்களின் கருத்துக்களை அவரவர்களுக்கு எடுத்துரைத்து விளக்கிக் கூறுவதைப்பற்றி நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் புத்த மதத்தின் கூட்டத்தில் "உங்கள் சமயத்தைப்போல் உலகில் வேறு ஒரு சமயம் இல்லை. வேறு சமயங்களில் இல்லாத அரிய தத்துவங்கள் உங்கள் சமயத்தில் தான் உண்டு" என்று சொல்வதும் முஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள் கூட்டங்களில் அவர்களின் மனதைத் திருப்தி செய்யுமாறு ஏதோ பேசுவதும் சைவ சமயத்தவர்களின் கூட்டங்களில் "நம் சமயமே அநாதியானது. பிற சமயங்களின் கருத்துக்கள் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டது" என்று பேசுவதும் சர்வசமய சமரச கொள்கையின் பாற்பட்டதா? நிற்க அடிகளுக்கு இருக்கும் பன்மொழிப் புலமையினால் தமிழ் மொழிக்கு அவர் செய்ய வேண்டிய தொண்டுகள் நிறையவுள்ளன. இதுவரையில் அவர்கள் செய்திருக்கும் மொழித் தொண்டை நாம் குறைத்துக் கூற விரும்பவில்லை "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்று சொன்ன கவிஞரின் வாக்கு அடிகளைப்போன்றவர்களால்தான் நிறைவேற முடியும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு வரையில் அடிகள் தனித் தமிழைத் தீவிரமாக ஆதரித்து எழுதியிருந்த சில கட்டுரைகளைப் படித்திருக்கிறேன். இந்தி மொழியின் வரவால் தமிழுக்கு நேரிடக்கூடிய இன்னல்களைத் தெளிவாகத் தம் கட்டுரைகளில் விளக்கியதுண்டு. இந்தியை எதிர்த்து கட்சி பேதமில்லாது நடந்த கிளர்ச்சிக்கும் அடிகளின் ஆதரவு ஓரளவு இருந்தது. ஆனால் அடிகள் தற்போது தனித் தமிழை விரும்பாததுபோல் பேசுகிறார்கள் உதாரணமாக 'வானொலி' என்ற தனித் தமிழ் சொல்லைவிட ரேடியோ என்ற ஆங்கிலப் பதமே போதும் என்னும் அளவுக்குச் சென்றுவிட்டார்கள்.

அன்பர் மு.சுப்பராமன் அவர்கள் சொல்வதுபோன்று பொறுமை நோக்கால் தூற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் சுத்தானந்தரைப் பழிப்பது எமது கருத்தல்ல, தமிழ் நாடு பத்திரிகை நிருபரின் கருத்தும் அதுவல்ல. அவர் நடுவு நிலைமை தவறாது தம் கடமையைச் செய்திருக்கிறார் கருத்து வேற்றுமைக்கு மதிப்பளிப்பது தமிழ்ப் பண்பு அவரின் கருத்துப் பிழையானால் அதைத் தடுக்கும்முறையில் எடுத்துக்காட்ட வேண்டும். அதை விட்டு நிருபரின் நோக்கத்துக்கு மாசுகற்பிப்பது அழகல்ல.

அன்பர் மு. சுப அவர்கள் தம் கட்டுரையில் 'ஈழத் தமிழ் மக்கள் தங்கள் உற்சாக மிக்க வரவேற்பின்மூலம் சுத்தானந்த யோகிக்கு மதிப்பளிக்கின்றார்கள் அதனால் ஈழம் பெருமையடைய வேண்டும்' என்ற கருத்துப்பட எழுதியிருக்கிறார். சென்ற சில தினங்களாக உற்சாக மிக்க வரவேற்பு சில இடங்களில் "ஊக்கமிக்க பகிஷ்கார"மாக மாற்றமடைந்ததை செய்தித் தாட்களில் கண்டேன் சுத்தானந்தர், ஏதோ, சமயத்துக்கு மாறாக நடக்கின்றாராம் அவர் நாத்திகராம் இன்னும் ஏதோ சொல்லி அவரைக்கண்டிக்கின்றனர். நீண்டாமை முதலிய தீய சக்திகளை அடிகள் எதிர்த்துப் பேசியதற்காக, வைதீகம் அவரைச்சாடுகின்றது தீவிரமாக கண்டனக் கணைகளைத் தொடுக்கின்றது.

இங்ஙனம்,
ம. க. சிவசண்முகம்
ஆள்கருணையா.

2

மகாகவி பாரதியைக் கௌரவிக்காத பெரும் பிழையைத் தமிழகம் உணர்ந்தது. பாரதியின் பின், தொண்டு செய்

[12-ம் பக்கம் பார்க்க]


# இந்த இசைத் தட்டுகளுக்கு உங்களின் ஆர்டர்களை அனுப்பிவிட்டீர்களா?

இன்றேல் உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்

"HIS MASTER'S VOICE"

*The Hallmark of Quality*

## ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்

மாடர்ன் தியேட்டர்ஸ்
**"கல்யாணி"**
பாட்டுகள்
(சங்கீதம்: எஸ். தக்ஷிணாமூர்த்தி)

N. 65079 — கே ராணி & பார்டி / டக்கு டக்கு / கே ராணி / என் வாழ்வினில்

N. 65080 — டி எம் சௌந்தரராஜன் / செல்வம் நிறைந்தவர் / டி. எம் சௌந்தரராஜன் & கே. ராணி / இனி பிரிவில்லாமல்

N 65081 — எஸ் தக்ஷிணாமூர்த்தி / காதல் / டி. எம். சௌந்தரராஜன் / வாழ்வார்க்கே

பெலிகன் பிக்சர்ஸ்
**"புயல்"**
பாட்டுகள்
(சங்கீதம் & பாட்டுகள்: எஸ். ஜி. கே. பிள்ளை)
பி ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி) & எச் மெஹ்பூப்

N 65083 — பிரேமையினாலே / ஜகமதிலே ஒரு

N. 65084 — பி ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி) / கட்டி கரும்பே / வாடுதே என் மனம்

N 65085 — பி ஜி கிருஷ்ணவேணி (ஜிக்கி) / வீணாமோ வாழ்நாள் / குல்ஜார் பீகம் / தன் மனமே

நீலா புரொடெக்ஷன்ஸ்
**"ஆத்ம சகி" ("பிரிய சகி")**
பாட்டுகள்
(சங்கீதம்: பிரதர் லக்ஷ்மணன்)
(பாட்டுகள்: கம்பதாஸன்)

N. 65086 — பி ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி) / எந்தன் கண்ணே / டி ஏ மோகி & பி லீலா / குண்டு குண்டு மல்லிகை

N 65087 — கண்டசாலா / காலம் மாறிடாதோ / என் எல் கானசரஸ்வதி / வெற்றி வெற்றி

ஸ்ரீ வள்ளி புரொடெக்ஷன்ஸ்
**"பேஷ்லேக்காரன்"**
பாட்டுகள்

N 65088 — சிதம்பரம் எஸ் ஜெயராமன் / பாடுபடுவோர்க்கே / மனிதா நீ செய்த

முருகன் டாக்கி பிலிம் கம்பெனி
**"ரத்ன குமார்"**
பாட்டுகள்
பி. பானுமதி & காலஞ்சென்ற பி யு சின்னப்பா

N 65089 — ஆனந்த வெள்ளம் / அந்தி நேரம்

ஜெமினி ஸ்டுடியோஸ்
**"மூன்று பிள்ளைகள்"**
பாட்டுகள்

N 65090 — பி ஜி கிருஷ்ணவேணி (ஜிக்கி) / என் அன்பமென்ன சொல்வேன் / ஏ எம் ராஜா / காலமென்பது அனுகூலமாகில்

(ராதா) ஜெயலக்ஷ்மி, பி லீலா & என் எல் கானசரஸ்வதி

N 65091 — மாலையிரித்த மகராசி / ஏ எம் ராஜா / வாழ்வதும் தாழ்வதும்

N 65092 — என் எல் கானசரஸ்வதி / உன்னருள் மறவேனய்யா / (2 பாகங்கள்)

பின்வரும் விசேஷ அட்டவணையில் காணப்படும் தெரிவு செய்யப்பட்ட பட இசைத் தட்டுகளும், மற்றவைகளும் இன்னும் 7 நாட்களுக்குள் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| "சம்சாரம்" | "குமாரி" | "அம்மா" |
| "தாய் உள்ளம்" | "காதல்" | "தர்மதேவதா" |
| "கல்யாணம் பண்ணிப்பார்" | "கைதி" | "அந்தமான்கைதி" |
| | "ராணி" | "என் தங்கை" |

சோல் ஏஜண்டுகள்:


**கார்கில்ஸ்** [சிலோன்] லிமிட்டெட், கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஞ்சிதம் எங்கே?

அன்று மல்லிகைத் தோட்டம் அல்லோல கல்லோலப்பட்டது. காரணம் பிரபல தேசத் தொண்டனும், மகா தியாகியும் தொழிலாளர்களின் நலனுக்காக உழைப்பதையே தனது வாழ்க்கை லட்சியமாகக்கொண்டவனுமான மனோகரனின் தலைமையில் அங்கு தொழிலாளர்களின் மாபெரும் பொதுக் கூட்டமொன்று நடைபெறவிருந்ததே. காலெல்லாம் மாடாக உழைக்கும் ஏழைத்தொழிலாளிகள் ஓய்வெடுத்துக் கொள்ளும் ஞாயிற்றுக் கிழமை. பாடுபடுவதற்கும் பட்டினி கிடப்பதற்குமே ஜென்மமெடுத்த அவர்களுக்கு ஒரு கோயில் உண்டா? சினிமா உண்டா? வேலை செய்ய வேண்டியது; அரை வயிற்றுக்கோ கால் வயிற்றுக்கோ சாப்பிட வேண்டியது; உறங்க வேண்டியது." இதுதான் அவர்களின் நித்ய கருமங்கள். சொழும்புப் பொருட் காட்சியும், கண்டியில் நடைபெறும் எசல பெரஹாராவும் கார்ணிவலும் அவர்களுக்கு எட்டாப் பழங்கள். அவற்றைப் பார்க்க வேண்டுமென்ற ஆசைகூட இல்லை அவர்களுக்கு. தோட்டக்காடுகளில் ஊமையராய்ச், "செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்ந்து" உடலும் உள்ளமும் மரத்துப்போன ஏழைத் தொழிலாளிகளுக்கு இவற்றிலெல்லாம் ஈடுபாடு கிடையாது. விருப்பு வெறுப்பற்ற ஞானிகளைப்போல் வாழும் ஒரு விநோதப் பிறவிகள்.

ஆனால், இந்தியாவைப் பற்றிய சமாச்சாரங்களையும். காந்தி, நேருபோன்ற இந்தியத் தலைவர்களின் பேச்சுகளையும் கேட்பதிலும் பத்திரிகைகளில் வாசிப்பதிலும் ஒரு தனி இன்பமுண்டு. இந்தியாவைக் காணமலும் இந்திய மண்ணில் கால்வைக்காமலும் ஆயுளெல்லாம் இலங்கைத் தோட்டங்களில் உழைத்துழைத்து மடிபவர்களுக்கு தம் தாய்நாட்டிலும் அந்நாட்டு மனிதர்களிலும் ஒருவித பற்று இருப்பது இயற்கையே. இந்தியாவிலிருந்து யார் வந்தாலும் அவர்களைக் காண வேண்டும் அவர்களின் பொன்மொழிகளைக் கேட்க வேண்டுமென்று விரும்பாத இந்தியனுமுண்டா? மல்லிகைத் தோட்டத்துக்கு மனோகரன் என்றொரு இந்தியத் தலைவர் வருகிறார் என்று கேள்விப்பட்டதும் அவரைத் தரிசிக்க வேண்டும் அவருடைய பேச்சைக் கேட்க வேண்டும் என்ற ஆவலால் அக்கம்பக்கத்துத் தோட்டங்களிலிருந்த தொழிலாளிகளனைவரும் தத்தம் பிள்ளைகுட்டிகளுடனும் மூட்டைமுடிச்சுகளுடனும் மல்லிகைத் தோட்டத்தை நோக்கிப் படையெடுக்கலாயினர். கடந்த உலக மகாயுத்தத்தின் போது ஜப்பானியர் மலேயாவுக்குள்ளும் பர்மாவுக்குள்ளும் புகுந்தபொழுது அங்கிருந்த இந்தியர்கள் உயிருக்குப் பயந்து கால்நடையாக இந்தியாவுக்குத் திரும்பிய காட்சியை ஒத்திருந்தது மல்லிகைத் தோட்டத்துக்கு இவர்கள் கால் நடையாகச் சென்றது. காலைமுதல் மாலைவரை மலைச்சாரல்களில் வளைந்து வளைந்து செல்லும் ரஸ்தாக்களில் இவர்கள் போய்க் கொண்டிருந்த காட்சி தூரப்பார்வைக்கு மழைக் கோலங்கண்ட எறும்புகள் தமது உணவைப் பத்திரமான இடத்தில் சேமித்து வைப்பதற்காக அணிவகுத்துச் செல்வதுபோல் இருந்தது.




இந்தியத் தோட்டத் தொழிலாளிகள் சிக்கனத்தில் பேர்போனவர்களெனினும் அவர்களிடம் ஊதாரித்தனம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. அவர்கள் சிறுகச் சிறுகச் சேமித்து வைக்கும் பணத்தை கதிர்காம யாத்திரை என்றும் சிவனொளி பாதத் தரிசனம் என்றும் சொல்லிக்கொண்டு ஊதாரித்தனமாக செலவழிக்கும் சுபாவமுடையவர்கள். இவர்களின் இந்தப் பலவீனத்தை அறிந்த வியாபாரிகள் தொழிலாளிகள் கூடுமிடங்களில் முகாம் போட மறப்பதில்லை. மல்லிகைத் தோட்டத்துக்கு பெருந் திரளான தொழிலாளிகள் செல்கின்றனரென்ற செய்தி காதில் விழுந்ததும் மசாலை வடை, மொச்சை கொட்டை வியாபாரிமுதல் ஜவுளித் தினுசுகள் விற்கும் பொட்டணி வியாபாரிகள் வரை மல்லிகைத் தோட்டத்துக்கு வந்து கடை பரப்பிவிட்டார்கள். சரியாக மாலை நான்கு மணிக்கு மனோகரன் ரஞ்சிதத்தோடு மல்லிகைத் தோட்டத்துக்கு வந்து சேர்ந்தான். கருப்பண்ணன் கங்காணி தோட்டத் தொழிலாளிகள் சார்பில் மனோகரனுக்கு மலர்மாலை சூட்டி வரவேற்றார். உள்ளூர்த் தலைவர்கள் சிலர் மேடையில் வீற்றிருந்தனர். மனோகரன் அவைத் தலைவருக்கென இடப்பட்டிருந்த ஆசனத்திலமர்ந்தான். ரஞ்சிதத்துக்கும் மேடையிலேயே இடம் கிடைத்தது.

இலங்கைத் தோட்டங்களில் வேலை செய்யும் இந்தியத் தோட்டத் தொழிலாளிகளின் பல்வேறு பிரச்னைகளையும்பற்றி அங்கு வந்திருந்த பேச்சாளர்களனைவரும் ஒருவர்பின் ஒருவராகப் பேசிய பின்னர் மனோகரன் பலத்த கரகோஷத்திடையே எழுந்து நின்று தொழிலாளர்களுக்குவணக்கம் தெரிவித்துவிட்டுப் பேசலானன்:

தோழர்களே!

இன்று உலகமெங்கும் தொழிலாளர்களின் தீனக் குரல் கேட்கின்றது. இக நாட்டுத் தொழிலாளிகளைக் காட்டிலும் பாரதநாட்டுத் தொழிலாளிகளின் நிலைமை படுமோசமாக இருக்கிறது. உலகில் இந்தியத் தொழிலாளிகள் இல்லாத இடமே கிடையாது. எங்கு பார்த்தாலும் இந்தியத் தொழிலாளிகள் கேவலமாக நடத்தப்படுகின்றனர். இக நாட்டுத் தொழிலாளிகளுக்குள்ள உரிமைகள் இந்தியத் தொழிலாளிகளுக்கு மறுக்கப்படுகின்றன? ஏன் இந்தப் பாரபக்ஷம்? இந்தியத் தொழிலாளிகள் மனிதர்களல்லவா? அவர்கள் வேலைத் திறமையில்லாதவர்களா? அவர்களுக்கு வாயும் வயிறும் இல்லையா? அல்லது பிள்ளை குட்டி கிடையாதா? எந்த நாட்டிலும் சுதேசத் தொழிலாளிகள் ஒருவிதமாகவும் இந்தியத் தொழிலாளிகள் ஒருவிதமாகவும் நடத்தப்படுகின்றனர்.

உங்களில் எத்தனை பேர் இந்தியாவில் பிறந்தவர்கள். நூற்றுக்கு இரண்டு பேர்தானும் இந்தியாவில் பிறந்திருக்கமாட்டீர்கள். உங்கள் தாய் தகப்பன்கூட இலங்கையில்தான் பிறந்திருப்பார்கள் அப்படியிருந்தும் நீங்கள் இன்று இலங்கைப் பிரஜைகளா? அல்லது இந்தியப் பிரஜைகளா?

(கூட்டத்திலிருந்து இரண்டுமில்லை என்ற குரல்கள் கேட்கின்றன)

அப்படியானால் நீங்கள் திரிசங்குசுவர்க்கத்திலிருக்கிறீர்கள். இந்த அநியாயம் அடுக்குமா? காடாகக் கிடந்த இந்தப் பூமியை வெட்டிக் கொத்தித் திருத்தி அழகிய நாடாக்கியது யார்? இந்தப் தோட்டத் தொழிலாளிகளெனப்படும் நீங்களல்லவா? நீங்கள் பாடுபடுகிறீர்கள் முதலாளிகள் அனுபவிக்கிறார்கள். அனுபவித்துவிட்டுப்போகட்டும். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. வேலைக்குத் தக்க கூலி கொடுக்கவேண்டாமா? உழைப்புக்கு ஏற்ற உரிமைகள் வழங்கவேண்டாமா? நீங்கள் மானமாக உயிர் வாழவேண்டாமா? நீங்கள் இலங்கையனு அல்லது இந்தியனு என்ற உண்மை தெரியவேண்டாமா?

தோழர்களே! இன்னும் நீங்கள் உங்களுடைய உண்மை நிலைமை உணரவில்லையா? அழுத பிள்ளைதான் பால் குடிக்குமென்ற பழமொழியை நீங்கள் அறிவீரா? நாங்கள் பேசாமல் நல்ல பிள்ளைகளாக இருந்தால் முதலாளி வர்க்கம் கண் திறந்து பார்க்கப் போகிறதில்லை. உங்கள் நலன்களைப் பாதுகாக்கவேண்டுமானல், உங்களுக்குரிய நியாயமாக கிடைக்கவேண்டிய உரிமைகளைப் பெற வேண்டுமானல், தொழிலாளர் வர்க்கம தலை நிமிர்ந்து நிற்கவேண்டுமானல் முதலாளி வர்க்கத்தை எதிர்த்து நாம் புரட்சி செய்ய வேண்டும். தொழிலாளியைத் தொழிலாளியாக நடத்தாத முதலாளிக் கும்பலை நிர்மூலமாக்கவேண்டும் பாட்டாளிகளைக் கூட்டாளிகளாக மதிக்காத தோட்ட முதலாளிகளைச் சுட்டெரிக்கவேண்டும் எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம் என்ற கொள்கையை நிலைநாட்ட வேண்டும். பாடுபட்டவன் பட்டினி கிடக்கப் பார்த்திருந்தவன் பணக்காரனுதும். கொடுமையைப் பொசுக்க வேண்டும். பாட்டாளி உலகம் வீறுகொண்டெழுந்தால் முதலாளி வர்க்கம் என்ன செய்யமுடியும். புரட்சி! புரட்சி! புரட்சி! வாழ்க புரட்சி. வீழ்க முதலாளித்துவம்.

மனோகரன் இப்படி வீராவேசத்துடன் பேசிக்கொண்டிருக்கையில் டக்ளஸால் கூலிக்கமர்த்தப்பட்ட காடையர்கள் சிலர் கலாட்டா செய்ய ஆரம்பித்தனர். கலாட்டா செய்தவர்களை அமைதியாக இருக்கும்படி மனோகரன் எவ்வளவோ மன்றாட்டமாகக்கேட்டான் ஆனல் அவர்கள் மனோகரனைத் திட்டிக்கொண்டு கிட்டவந்தவர்களைத் தாக்கினர்கள். பெண்களும் குழந்தைகளும் பீதியடைந்து ஓலமிட்டார்கள். தொழிலாளிகள் பலர் உயிருக்குப் பயந்து மூலைக்கொருவராக ஓட ஆரம்பித்தார்கள். காடையர்கள் மனோகரனுக்கு தீங்கு உண்டுபண்ணும் எண்ணத்துடன் மேடையை நோக்கி விரைந்தார்கள். அவர்களின் எண்ணத்தையறிந்த தொழிலாள வாலிபர்கள் சிலர் மனோகரனை யாரும் அணுகவொட்டாதபடி தடுத்து பத்திரமான ஒரு இடத்தில் கொண்டு போய்ச் சேர்த்தனர். இந்தக் கலகத்தில் ரஞ்சிதம் எங்கு போனுளென்பதை யாரும் கவனிக்கவில்லை. மனோகரன் ரஞ்சிதத்தைப் பற்றி விசாரித்த பின்னர்தான் தொழிலாளிகள் மூலைக்கொருவராகச் சென்று ரஞ்சிதத்தைத் தேடினர்கள். ரஞ்சிதத்தை எங்கும் காணவில்லை. மனோகரன் நிம்மதியற்றுத் தவித்தான்.

இப்படியிருக்கையில் "தீ! நெருப்பு" என்று பல குரல்கள் ஏக காலத்தில் ஒலித்தன. பாக்டரியில் தீப் பற்றிக்கொண்டது. தொழிலாளிகள் வாளிகளில் தண்ணீர் மொண்டு ஊற்றியும் மண்ணை அள்ளி வீசியும் நெருப்பை அணைக்க முயன்றனர். ஆனல் முடியவில்லை. சில நிமிஷ நேரத்துக்குள் பாக்டரி பூராவும் தீப்பற்றிக்கொண்டது. பாக்டரியில் தீப்பற்றிய சமாச்சாரத்தை டக்ளஸுக்கு அறிவிக்கச் சென்ற தொழிலாளிகள் "துரை கண்டிக்குப் போய்விட்டார்" என்ற செய்தியுடன் திரும்பிவந்த

(9-ம் பக்கம் பார்க்க)




மல்லிகைத் தோட்டத்தில் கூடியிருந்த ஒரு பிரமாண்டமான தொழிலாளர் கூட்டத்தில் இந்தியத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி மனோகரன் விரிவாக எடுத்துக் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே தேசிய மொழிதான் வேண்டும்

## கல்லூரி அதிபரின் பிரசங்கம்

## சிங்களத்தை அரசாங்க மொழியாக்க கிளர்ச்சி

ஒரே ஒரு மொழியை மட்டும் தேசிய மொழியாக்குப்படி அவிஸ்ஸாவெலை அர்ச்மேரீஸ் கல்லூரி அதிபர் திரு எஸ். ஜோசப் கல்லூரிபரிசளிப்பு விழாவின்போது வேண்டுகோள் விடுத்தார். அவிஸ்ஸாவெலை ஜில்லா நீதிபதி திரு என். கிருஷ்ணதாசன் தலைமை வகித்தார்.

திரு கிருஷ்ணதாசன் பேசும்போது கூறியதாவது:- "எந்த ஒரு தேசிய இனமாவது மற்றொரு இனத்தின் மொழியைத் தனது சொந்த தேசியமொழியாக ஸ்வீகரித்துக்கொள்வதல்லை. இந்த நாடு அதன் தேசிய மொழியைக் கொண்டே நாகரீகமடைந்திருக்கிறது. ஐக்கியம் நிலைக்க வேண்டுமானல் ஒரே ஒரு மொழிதான—இரண்டல்ல—தேசியமொழியாக இருக்கவேண்டுமென்று இக்கல்லூரி அதிபர் கூறினர். ஒரு குறிப்பிட்ட மொழியை விரும்பாத ஒருமக்கள் கோஷ்டியின்மீது புகுத்துவதின் மூலம் ஐக்கியத்தைப் பெற முடியாது'

சிங்களம்மட்டுமே தேசிய மொழியாக—அரசகரும மொழியாக—இருக்க வேண்டுமென்று சிங்களவர் மத்தியில் கிளர்ச்சி நடைபெறுகிறது. பிரஸ்தாப கல்லூரி அதிபரின் பிரசங்கமும் அக்கிளர்ச்சியின் ஒரு பகுதியே அரசாங்கம் சிங்களம் தமிழ் என்ற இரு மொழிகளிலும் அரசாங்க அலுவல்களை நடத்த திட்டம் தீட்டிக்கொண்டிருப்பதாகக் கூறுகிறது ஆனல் அதே சமயத்தில் தமிழ் மொழியை நசுக்கி, தமிழர்களும் சிங்களம் கற்றுக் கொள்ளும் படியான நிர்ப்பந்த நிலைமையைச் சிருஷ்டித்து வருகிறது. இரு மொழிகளால் அரசாங்க அலுவல்களை கவனிப்பது சாத்தியமில்லையெனக் கூறுவது நியாயமே. அரசாங்க "பைல்"களெல்லாம் தமிழ், சிங்களம் என்ற இரு பாஷைகளிலும் எழுதிவைக்க ஆரம்பித்தால் அதுவெறும் கேலிக் கூத்தாகத்தான் முடியும். இதனைத் தீர்க்கும் வழி தமிழர்கள் மீது சிங்களத்தைத் திணித்து சர்வம் சிங்கள மயமாக்கி விடுவதல்ல. ஆனல் சிங்களப் பிரதேசத்தில் சிங்கள மொழியையும் தமிழ் பிரதேசத்தில் தமிழ் மொழியையும் அரசகரும மொழிகளாக்குவதுதான் அதற்குள்ள ஒரேவழி. அந்தந்தப் பிரதேசங்களில் இரு சமஷ்டி அரசுகள் தனித்தனியாக ஸ்தாபிக்கப்பட்டால் மட்டுமே அது சாத்தியமாகும்.

நைரோபி (கெனியா) ஹுசேன் மதானி என்ற ஒரு ஆசியாக்காரரை சுதேசி பயங்கரவாதிகள் இங்கு கொன்றுவிட்டனர். அவரது மனைவி படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.


ஓர் அரிய தருணம்.

டிசம்பர் 20ந் திகதி முதல் ஜனவரி 5ந் திகதி வரை

சந்திரா போட்டோ

கிறிஸ்மஸ் பண்டிகைக்கென விசேஷ ஏற்பாடுகளுடன் எங்கள் வாடிக்கைக்காரர்களினது அபிமானத்திற்குப் பதினைந்து தினங்களுக்கு விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| போஸ்ட்கார்ட். | 3 கொப்பிகள் | ரூ. | 5-00 |
| கபினட் | 3 | ,, ரூ | 10-00 |
| $8\frac{1}{2} \times 6\frac{1}{2}$ | 3 | ,, ரூ | 15-00 |
| 12 × 10 | 3 | ,, ரூ | 25-00 |

அவசர பாஸ்போட் படங்கள், வெளியில் வந்து படம் எடுத்தல், வாழ்த்துக் கார்டுகளில் படம் பதித்தல் வர்ணக் கலர் வேலைகள், சினிமா சிலேட் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

விபரங்கட்கு: சந்திரா போட்டோ

(GEVAERT) கிவட் விநியோகஸ்தர்கள்.

(Front Street) 68, பூந்தோட்ட ரோடு,

போன்: 5737. கொழும்பு


பலே செய்தி

## காத்திருந்தவன் காதலி கம்பி நீட்டினுள்

### நேற்றுவந்தவன் ஏமாந்து கத்தியால் குத்தினன்?

மணமகளை மணமகனின் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகும்போது பாதிவழியில் மணமகள் மறைந்து விட்டதின் விளைவாக சித்தம் குழம்பிய மணமகன் நான்கு பேர்களுக்கு கத்தியால் குத்திவிட்டு தானும் மறைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

அம்பன்பிட்டியைச் சேர்ந்த உடுகாமம் என்ற கிராமத்தில் பாடசாலையொன்றில் கல்வி பயின்று வந்த பெணிசகே என்ற 18 வயதுள்ள யுவதியை பெற்றோர்கள் சோமதாச என்பவருக்கு மணமுடித்துக் கொடுத்தனர் இந்த விவாகத்தைத் துரிதமாக நடத்தக் காரணம் அந்த யுவதி மற்றொரு வாலிபன்மீது காதல் கொண்டிருக்கிருள் என்று பெற்றோர்கள் சந்தேகப்பட்டதுதான்.


விவாகச் சடங்குகள் முடிவடைந்த பின்னர், உறவினர் புதிய தம்பதிகளை அழைத்துக் கொண்டு மணமகன் வீட்டுக்குப் புறப்பட்டனர்.

கார் டெடிகம நகரத்தை அடுத்து வந்துகொண்டிருக்கும்போது மணமகள் ஒரு வீட்டைச் சுட்டிக் காட்டி, அங்கே வசிக்கும் தனது தோழி ஒருவள் தான் வருவதை எதிர்பார்த்துகொண்டிருப்பாள் என்றும அவளைச் சந்தித்து விடைபெற்றுசெல்லவேண்டுமென்றும் கூறினளாம். மணமகன் ஆட்சேபித்தானெனினும் அவள் அதை லட்சியம் செய்யாமல் பலாத்காரமாக காரினின்று இறங்கி அவ்வீட்டுக்குள் சென்றுள். மணமகனும் அவளுடன் செல்ல விரும்பின போதிலும், அவளுடைய வேண்டுகோளின மீது அவன் காரிலேயே காத்திருந்தான். ஆனல் அவள் திரும்பி வராததால் மணமகன் அவளைத்தேடிக் கொண்டு சென்றுன். எனினும் அவளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. மணமக்களின் கார் தாமதமாவதைக்கண்டு முன்னல் சென்று கொண்டிருந்த கார்கள் இரண்டும் திரும்பி வந்தன. மணமகனுக்கு பைத்தியம்கண்டு தலைமறைவாகப் போய்விட்டான். அவன் 4 பேர்களுக்கு கத்தியால் குத்திவிட்டதாகவும் புகார் செய்யப்பட்டிருக்கிறதாம். இத்தகவல் மொரவக்க பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.


சூழ்நிலைக்கேற்ற கல்வி

10 மாதத்திற்குள் 1ம் பதிப்பு விற்பனையாகி முற்றும் திருத்தி அமைக்கப்பெற்ற இரண்டாம் பதிப்பு வெளிவந்து விட்டது.

2ம் பதிப்பிற்கு அமோகமான ஆதரவு



இன்று பல கல்விச் சாலைகளில் பாடப் புத்தகமாக ஏற்று படிப்பிக்கின்றனர் அதிபர்களே! பெற்றோர்களே!! ஆசிரியர்களே!!! மாணவர்களே!!!! உத்தியோகத்தர்களே!!!!!

கவனியுங்கள்

தமிழ், ஆங்கிலத்துடன் சிங்களமும் படியுங்கள்.

யாழ்ப்பாணம், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர்

சுவாமி குணரத்தின (புத்தகுரு)

தமது பல வருட ஆசிரிய அனுபவத்திற்கிணங்க இயற்றியதும்

கொழும்பு லீலா ஸ்டோர்ஸ் அதிபர் ச.த.சின்னத்துரை

அவர்களால் பதிப்பிக்கப் பெற்றதுமான

කතා කරන දෙමළ

சம்பாஷணைச் சிங்களம்

புதுவகுப்பு புத்தக அட்டவணையில் "சம்பாஷணைச் சிங்களத்"தையும் சேர்த்துக் கொள்ளுங்கள். மாணவர்கட்கு எதிர்கால சுபிட்சத்தைத் தரவல்லது. வயது வந்தோருக்குப் பொது வாழ்வில் சிறப்பைத்தர வல்லது.

விலை ரூபா 1-50. தபால் செலவு சதம் 30.

கிடைக்குமிடங்கள்: விவேகானந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம்

சோதிட விலாச புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

தனலக்ஷ்மி புத்தகசாலை, சுன்னுகம்.

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

சிற்றம்பலம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்

ஸ்ரீ முருகன் ,, ,,

ஆனந்தா ,, ,,

வட இலங்கை புத்தகசாலை, பருத்தித்துறை.

ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

பஸ்தியாம்பிள்ளை ,, ,,

தியாகராசா ,, ,,

ரத்தின ஸ்டோர்ஸ், கும்பனித்தெரு, கொழும்பு

லீலா ஸ்டோர்ஸ்

249, நொறிஸ்ரோட். கொழும்பு.

போன்: 5924. தந்தி: "Kankeyan" Colombo


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீராங்கனைகளின் மகத்தான வெற்றி

## வளையற் சட்டம் வாபஸ்

கையில் வளையல்கள் அணிவது இந்திய மாதரசிகளின் புராதன கலாச்சாரங்களிலொன்று இன்றுநேற்று தோன்றிய நவநாகரீக பழக்கமல்ல' ஆனல் தேயிலை தோட்டத்தில் கொழுந்து பறிக்கும் இந்திய மாதரசிகள் கையில் வளையல்கள் அணியக் கூடாது என்று உத்தரவிட்டார் ஒரு திமிர்பிடித்த தோட்டத்துரை இந்த அக்கிரம உத்தரவுக்கு அடிபணிய மாட்டோம் என ஆர்த்தெழுந்தனர் நமது மாதர் திலகங்கள் 21 பெண் மணிகளால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நாளடையில் 274 பேர்களாக அதிகரித்தது 42 தினங்களாக நடத்திய இந்த வீரப்போராட்டத்தின் பயனாக முதலாளி வர்க்கமே பெண்மணிகளின் முன்னல் அடிபணிய நேர்ந்தது இந்த புதுமைக்குரிய சம்பவம் எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த அல்கொல்லை தோட்டத்தில் நடந்ததாகும்

எட்டியாந்தோட்டையைச்சேர்ந்த அல்கொல்லைத் தோட்டத்திலுள்ள வேவத்தலாவ, பூணுகொல்லை ஆகிய மூன்று டிவிஷனிலுள்ள தேயிலை கொழுந்து பறிக்கும் பெண் தொழிலாளர்கள் கொழுந்து பறிக்கும்போது கையில் கண்ணாடி வளையல்கள் அணியக் கூடாதென்றும் அப்படி கண்ணாடி வளையல்கள் அணிந்துகொண்டு வேலைக்கு வந்தால் அவர்களுக்கு வேலை கொடுக்க கூடாதென்றும் அக்டோபர் மாதம் 28-ம் தேதி தோட்டத்துரை உத்தரவிட்டார் 28-ம் திகதி வளையல்கள் அணிந்து கொண்டு வேலைக்குவந்த 21 பெண்களுக்கு வேலை மறுக்கப்பட்டது 21 பெண்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த கண்ணாடி வளையல் போராட்டப் நாளுக்கு நாள் பெருகி தொகை 274 ஆக உயர்ந்துவிட்டது

### வாதப்பிரதி வாதம்

கண்ணாடிவளையல் அணியக் கூடாது என்பதற்கு தோட்டத்துரை கூறிய காரணமென்னவெனில்: கண்ணாடி வளையல் துண்டுகள் தேயிலையில் கலந்து வெளிநாடு சென்றல் தேயிலையின் தரம் குறைந்துவிடுமென்று புரோக்கர்கள் கூறினர்கள் என்பதுதான் இந்த வழக்கம் மேற்படி தோட்டத்தில் கடந்த 16 வருட காலம் அமுலிலிருந்ததென்றும் தோட்டத்துரை வாதாடினர்.

இவ்வதமான உத்தரவுகள் எக்காலத்திலும் நடைமுறையில் இருந்ததில்லை என்றும் பெண்கள் தங்கள் கலாசாரத்தை கைவிட்டு விட முடியாதென்றும்' இந்த வழக்கம் இலங்கையில் வேறு எந்த தோட்டத்திலுமே கிடையாதென்றும் பெண் தொழிலாளர் சார்பில் வாதிக்கப்பட்டது.

### திடசங்கற்பம்

இவ்விதமாக அதிகார வர்க்கம் ஒரு பக்கமும், பெண் தொழிலாளர்கள் மறுபக்கமுமாக வளையல் போராட்டம் ஆரம்பமாயிற்று.

நவம்பர் மாதம் 30-ம் திகதி வரை இந்த 21 பெண்கள் வேலைக்குச்செல்வதும், துரை வேலை இல்லை என்று மறுப்பதுமாக இருந்தது: துரையின் இந்த அக்கிரமப் போக்கு அங்கு வதியும் எல்லா பெண்கள் மனதிலும் பெரும் புயலைக்கிளப்பிவிட்டது. அதிகார வாக்கத்தினரின் திமிருக்கு அடிபணியமாட்டோம், பெண்ணினத்தின் உரிமையை பறிகொடோம் என அவர்கள் திடசங்கற்பம் செய்தனர்.

### தொழிலாளர் காங்கிரஸ்

இத்தகராறில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலையிட்டு தொழில் இலாகாவுக்குப் புகார் செய்ததின்மீது கொழும்பில் சமரஸப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இறுதியில் தோட்ட நிர்வாகம் விட்டுக்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. வளையற சட்டத்தை வாபஸ் வாங்குமாறு தோட்டத் துரைமார் சங்கம் பிரஸ்தாப தோட்டத் துரைக்கு உத்தரவிட்டிருக்கிறது. வேலை கொடுக்கப்படாத நாட்களுக்கு ஆமிகரேஷன் சட்டப்படி சம்பளம் கொடுக்கவேண்டுமென்று தொழிலாளர் காங்கிரஸ் வாதாடுகிறது இன்னும் இப்பிரச்னை தீர்க்கபடவில்லை.

இப்மாதம் 7-ம் திகதி திங்கட்கிழமை 274 பெண்கள் வளையல்கள் அணிந்து கொண்டு வேலைக்குச் சென்றனர். வளையல் அணிந்து கொண்டுவந்த எல்லா பெண்களுக்கும் அன்று வேலை கொடுக்கப்பட்டது. எந்த அக்கிரமமான, அநீதியான உத்தரவாயிருந்தாலுஞ்சரி ஒற்றுமையினுலும் கட்டுப்பாட்டாலும் தகர்ந்தெறிந்துவிட முடியுமென்பதை நிரூபித்துவிட்டார்கள் அல்கொல்லை தோட்டத்துப் பெண்மணிகள்.

நமது மாதரசிகளின் வீரப்போராட்டதின் மத்தியல் பெரிய கங்காணியைதச் சேர்ந்த 7 பெண்கள் கருங்காலிகளாக மாறியது மிக வெட்கக்கேடானது என்பதை குறிப்பிட்டுத்தானுக வேண்டும். நமது வீரப் பெண்களின் வெற்றிப் பிரவேசம் இந்த பெண்மணிகளுக்கு நற்புத்தி புகட்டுமாக.

### பிரஜா உரிமை மறுக்கப்படுவது

[illegible] வேல் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு தோட்டத்திலிருந்து இரண்டு தொழிலாளர் குடும்பங்கள் சென்ற 22-8-52ல் இந்தியாவிற்கு போயிருக்கிறார்கள். இந்த இரண்டு குடும்பங்களில் ஒரு குடும்பத்தார் தனது சகோதரர் இந்தியாவில் சுகமில்லாதிருப்பதை பார்ப்பதற்காகசென்றவர் மற்றொரு குடுப்பத்தினர் தனது மகளின் திருமணத்திற்காக சென்றவர். ஒரு குடும்பத்தினர் தான் இந்தியா சென்று இலங்கை திரும்பிவிடுவோமென்ற நம்பிக்கையின் பேரில் தனது பக்கத்து வீட்டாருடைய நகைகளை வாங்கிப்போட்டுக்கொண்டு போனதுடன் தனது சாமான்களையும் தான் வளர்த்துவந்த ஆடுகளையும் தோட்டத்தில் நிறுத்திவிட்டு போயிருக்கிறார்கள் அதோடு ஏற்கனவே தோட்டத்தில் வாங்கிய கடன்களும் ஒழுங்கு செய்யாமலிருக்கிறது. மற்றொரு குடும்பத்தார்கள் தனது மகளின் திருமணம் முடிந்தபின் இலங்கை திரும்பி விடுவோமென்ற நோக்கத்தில் தனது வீட்டிலிருக்கும் சாமான்களையும் ஆடு, கோழி இவைகளை பார்த்துக் கொள்வதற்காக தனது குழந்தைகளில் இருவரையும் தோட்டத்தில் நிறுத்திவிட்டு சென்றனர் மேற்படியார்கள் இந்தியா செலலும்போது தோட்டத்தில் விட்டுச் சென்ற பெண் குழந்தைகடந்த29-10-52ல் புஷ்பவதியாகிவிட்டது. இந்தியா சென்ற இரண்டு குடும்பத்தினரும் இலங்கையில் தொடர்ந்து வசித்து வந்ததுடன் இவர்கள் இலங்கை பிரஜையாவதற்கு மனுப் போட்டிருக்கிறார்கள். இங்கிலையில் இந்தியா சென்று தங்கள் விவகாரங்களை முடித்துக்கொண்டு இலங்கை திரும்புபோது தோட்டத்துரை அவர்களை தோட்டத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு முடியாதென மறுக்கிறார் இது விஷயத்தையிட்டு இ தொ கா. கழனிவேலி ஜில்லாப் பிரதிநிதி தோட்டத்துரைக்கு கடிதம் எழுதி மேற்படியாகளை இலங்கைக்கு எடுக்கவேண்டுமென கேட்டதற்கு தோட்டத்துரை பதில்விடுவது என்னவென்றால் தற்சமயம் ரப்பர், தேயிலை விலை குறைந்துக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில் தோட்டத்தில் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாது. ஆகவே மேற்படியாகளை இலங்கைக்கு அனுப்பும்படி டிப் போவுக்கு கடிதம் எழுத முடியாதென மறுக்கிறார். நிலமை இப்படி இருக்கும் போது இவர்களுடைய பிரஜா உரிமை மனுப்பத்திரம் என்னவாவதுடன் மைனர் குழந்தைகளின் நிலை என்னவாவது? புஷ்பவதியான பெண்ணின் கதி என்ன?

### அம்பாமலையில் பொதுக் கூட்டம்

எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த அம்பாமலை தோட்டத்தில் இ இ கா பொதுக்கூட்டம் ஒன்று தோட்டக் கமிட்டி உப தலைவர் திரு முத்தையா தேவர் தலைமையில் 16-11-52ல் நடைபெற்றது

தலைவர் கூறியதாவது;- தொழிலாளரின் எதிர்காலம் மிக நெருக்கடியான கட்டத்தை அடையவேண்டிய நிலையில் வந்துகொண்டிருக்கிறது இந்த சமயத்தில் ஒவ்வொரு தொழிலாளியும தனது கடமையை உணர்ந்து தொழில் சங்கத்தின் அங்கத்தினரை பெருக்குவதற்கு முன்வரவேண்டும் 1952ம் வருடத்திற்கு அங்கத்தினர் பதிவதற்கு இன்னும் ஒரு சில மாதங்களே பாக்கியிருக்கின்றன அதற்குள் ஒவ்வொருவரும் அங்கத்தினராக வேண்டுமென கேட்டுக்கொண்டார்

அடுத்தாற்போல் பேசிய தோட்டக் கமிட்டி தலைவர் திரு எம் சன்னசி, காரியதரிசி திரு எஸ் குழந்தவேல் ஆகியோர்கள் தொழிலாளரின் ஒற்றுமையும் கட்டுப்பாட்டையும்பற்றி பேசியபின் கூட்டம் கலைந்தது

### அவிசாவளையில்

அவிசாவளையைச் சேர்ந்த எல்ஸ்டன் தோட்டத்தில் இலங்கை இந்திய காங்கிரஸ் தோட்டக் கமிட்டியின் தேர்தல் கூட்டம் கடந்த 23-11-52ல் இ. இ. கா. தலைமையில் நடைபெற்றது.

### சலவைத் தொழிலாளர் யூனியன்

அகில இலங்கை தோட்ட சலவைத் தொழிலாளர் யூனியன் பொதுக் கூட்டங்கள் இம்மாதம் 12, 13, 14, 15, 16-ம் தேதிகளில் முறையே கொட்டகலை, கொத்தமலி, அட்டன், தலவாக்கலை, உலஹா ஆகிய ஜில்லாக்களில் மேற்படி யூனியன் தலைவர் திரு எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்றது.




## மண்ணைப் பெரிசென எண்ணிக்கிட்டே.........

(குன்றும் மலையும் நிலமாக்கி அதில்
கோடிக்கணக்கில் செடியை நட்டு
கொழுந்து கிள்ளிய இந்தியரின் குலக்
கொழுந்தைக் கிள்ளுது லங்காபுரி

மண்ணில் உனக்கு இடமில்லை என்றவர்
மண்ணில் மறைந்ததைக் கண்ட பின்னும்
மண்ணைப் பெரிசென எண்ணிக்கிட்டே அவர்
மகனும் சொல்லுருர் ராமலிங்கம்


—கொத்தமங்கலம் சுப்பு.


# இரும்புப்பணப் பெட்டிகள்

லண்டன் நகர ஜோண்டான் லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை.

1795-ம் ஆண்டில் ஸ்தாபிதம் - மிகப் பழைய ஸ்தாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப்படவில்லை



கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை

## டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்.

ஆபீஸ் பொருட்கள் விற்பனை பகுதி

18/20, குவீன்ஸ் வீதி, கோட்டை கொழும்பு

போன்: 2301


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய இலக்கிய கதைகள்.

# உயிருக்கு ஆபத்து வந்தும் உண்மையைப் பேசிய உத்தமன்

[ஜனாப் கே. எஸ். முகம்மது தாவூது]

### சேவை

முஸ்லிம்களின் மத்தியில் பல கலீபாக்கள் மிக புகழ் உடையவர்களாக வாழ்ந்தார்கள். இக்காலத்தில் வாழும் அரசர்களை விட அமைச்சர்களை விட, அரசாங்க தளபதிகளை விட அவர்கள் தங்கள் வாழ்க்கையை எளிய நடையில் நடத்தினார்கள். தங்கள் சௌக்கியத்தை-குறைத்துக்கொண்டார்கள்.

அதைப்போன்று தன் வாழ்க்கையை நடத்தியவர் தான்-கலீபா ஹஜ்ரத் உமர் பின் அப்துல் அஸீஸ் என்பவர். அவர் நீதியின் அதிபதி ஒரு நாள் படுக்கையில் 'படுத்திருந்தார் அப்போது கோடைகாலமாக இருந்தது. வியர்வை வியர்த்து கொட்டியது. கனீஸ் விசிறியை வைத்து விசிறிக்கொண்டிருந்தாள். அவள் கொஞ்ச நேரத்தில் உறங்கிவிட்டாள் கலீபா அவர்கள் விழித்து விசிறியை கையிலெடுத்துக்கொண்டு, அந்த அடிமை பெண்ணுக்கு விசிறத் தொடங்கினார்கள். கொஞ்ச நேரத்தில் கனீஸின் கண்கள் திறந்தன கலீபா தனக்கு விசிறிக்கொண்டிருப்பதைக் கண்டு பதறி ஸ்மரணையற்றுவிட்டாள்.

"ஏன் பயப்படுகிறாய்? நீயும் என் போன்ற பிறவி தானே! நான் உஷ்ணத்தால் பாதிக்கப்பட்ட போது நீ விசிறியால் விசிறி சௌக்கியத்தை அளித்தாய் பிறகு உன்னை உஷ்ணம் தாக்கியபோது நான் விசிறியால் வீசினேன். இதிலே என்ன தப்பு?" என கூறினார்கள்.

——

### அயலார்மீது ஆதரவு

நாயகமவர்களின் நண்பர்களை ஸஹாபி என அழைப்பது வழக்கம் நாயகமவர்களின் நெருங்கிய நண்பர்களில் ஹஜ்ரத் அப்துல்லாவும் ஒருவர். அவர் அல்லாஹ்மீது பக்தியும், நாயகமவர்கள்மீது அபார அன்பும் வைத்திருந்தார் நாயகமவர்களின் சொல்லை பின் பற்றி நடப்பவர்.

ஒரு நாள் ஹஜ்ரத் அப்துல்லாவின் இல்லத்தில் ஒரு ஆடு அறுக்கப்பட்டது அவரின் வீட்டுக்கு பக்கத்தில் ஒரு யஹூதி வசித்துவந்தார். ஹஜ்ரத் அப்துல்லா அன்று வெளியில் சென்றிருந்தார் மாலை வீடு வந்து சேர்ந்ததும், "என்ன! நீங்கள் பக்க வீட்டுக்கு இறைச்சி அனுப்பினீர்களா?" என்று கேட்டார்கள்.

"அவர் யஹூதி எதற்காக அவர் வீட்டுக்கு இறைச்சி அனுப்பவேண்டும்?" என வீட்டிலுள்ளவர்கள் கேட்டார்கள்.

"அவர் யஹூதியாக இருந்தால் என்ன?" என்று ஹஜ்ரத் அப்துல்லா கேட்டார்கள். மேலும் சொன்னார்கள் "இருந்தாலும் அவர் பக்கத்து வீட்டுகாரரல்லவா? நபிநாயகமவர்களும் அடிக்கடி எச்சரித்து இருக்கிறார்களே பக்கத்து வீட்டுகாரரிடம் அன்பாய் உறவாடுங்கள். அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, முஸ்லிம் அல்லாதவர்களா இருந்தாலும் சரி என்று"

ஹஜ்ரத் அப்துல்லா பக்கத்து வீட்டுக்கு இறைச்சி அனுப்பும்வரை சாப்பிடாமல் இருந்தார்!

——

### உண்மை

நம் தாயின்மூலம் பெரிய ஒலியுள்ளாவை-பற்றிருப்பீர்கள். அந்த புகழுக்குறிய பெரியார்தான் ஷெய்க் அப்துல் காதர் அவர்கள் ஜீலானில் வசித்தார்கள். அதனால்தான் அவர்களுடைய பெயரோடு ஜீலானிஎன்றும் அழைக்கப்படுகிறது. "அல்லாஹ் அவர்கள்மீது கருணைபுரிவானாக!" அவர்கள் ஞானியாயும், அல்லாஹ்வை அறிந்தவர்களாகவுமிருந்தார்கள். அவர்கள் சிறு வயதாக இருக்கும்போது தந்தை காலமானார்கள் ஷெய்க் அப்துல் காதர் ஜீலானிச்கு எழுதப் படிக்க அதிக விருப்பம். பக்தாது நகரில் பெரிய-பெரிய பண்டிதர்கள் இருப்பதாக கேள்விப் பட்டார்கள் ஆரம்ப கல்வி கற்று முடிந்த பின் டச்தாது போக ஆசை உண்டாகிவிட்டது.

படிப்பதற்கு பக்தாதுக்கு அனுப்பும்படி அம்மாவை கேட்டார்கள். அம்மாவும் அதற்கு ஒப்புக்கொண்டார்கள்.

அந்தக்காலம்இக்காலத்திலிருக்கும் பிரயாண வசதிகள் கிடையாது. கால் நடையாகவோ அல்லது நடையினங்களின் மீதோ அமர்ந்து பயணம் செய்ய வேண்டியதாய் இருந்தது. வழியில் திருட்டு பயமும் உண்டு.

பக்தாதுக்கு செல்லும் ஒரு கூட்டத்தோடு தாங்களும் கலந்து கொண்டு சென்றார்கள். திருட்டு போகாமல் பாதுகாப்பாய் இருக்கும்பொருட்டு 40 தீனாரை சட்டையின் பக்கததல் வைத்த-தைத்து அனுப்பினார்கள். மேலும் சொன்னார்கள் "மகனே! உனக்கு எவ்வளவு கஷ்டம்வந்தாலும், உயிருக்கே ஆபத்து வந்தாலும் பொய் மட்டும் சொல்லவேண்டாம்'

கூட்டம் பிரயாணம் செய்துகொண்டிருந்தது. கொஞ்சதூரம் சென்றதும் திருடர்கள் மறித்துக்கொண்டார்கள். அக்கூட்டததார்களிடமிருந்த பொருட்கள் யாவையும் சூறையாடிக்கொண்டார்கள். ஒரு திருடன் ஷெய்க் அப்துல் காதர் ஜீலானி அவர்களை கேட்டான "ஏன் தம்பி! ஏதாச்சும் உன் சட்டையும் இருக்கா? ஆம் 40 தீனர் இருக்கிறது?' என்று பதில் சொன்னார்கள் சாதா சட்டையை பார்த்ததும் திருடனுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. அவன் சிரித்தான். மற்ற திருடர்கள் கேட்டதற்கும் இதே பதிலை சொன்னார்கள். "ஆம்! என்னிடம் 40 தீனர் இருக்கிறது'


கடைசியில் இச் செய்தி தலைவன்வரை எட்டிவிட்டது. அவன் கேட்டான், "எங்கே இருக்கிறது"

"என் சட்டையின் கீழ் பாகத்தில் வைத்து-தைக்கப்பட்டிருக்கிறது' என பதில் சொன்னார்கள்.

திருடர்கள் சட்டையை கிழித்து பார்க்கும்போது 40 தீனர் வெளிப்பட்டது. இதை கண்டு திருடர்களின் தலைவன் ஆச்சரியமடைந்தான். மேலும் கேட்டான், 'ஏன் தம்பி! அப்பொருள் தவறிவிடும் என்பதற்காக இவ்வளவு பாதுகாப்பு செய்து வைத்ததை நாங்கள் கேட்டவுடன் எதற்காக சொன்னாய்?"

"என்ன ஆபத்து நேர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாதென்று என் தாயார் சொன்னார்கள். அதை எப்படித் தட்டுவது" என்று கேட்டார்கள்.

ஷெய்க் அப்துல் காதர் ஜீலானி சொன்ன இச்சொல் தலைவனை கிறு—கிறுக்க செய்துவிட்டது. "இச் சிறுவன் தாயின் சொல்லை எப்படி பின்பற்றி நடக்கிறான்? நான் அல்லாஹ்-ரசூலின் சொல்லை மீறி திருடுகிறேன் அல்லவா?" என்று தனக்கு தானே எண்ணினான். தலைவனும் அவனை சேர்ந்த திருடர்களும் உடனே இறைவனிடம் பாப மன்னிப்பு கோரினார்கள். தாங்கள் திருடிய பொருட்கள் யாவையும் திரும்ப கொடுத்துவிட்டார்கள். பகுதாதுக்கு செல்லும கூட்டததை போக அனுமதித்துவிட்டார்கள். அந்த திருடர்கள் யாவரும் [illegible] களாக மாறிவிட்டார்கள்.




### நபிகள் நாயகம் ஜெயந்தி விழா

——

உடுகொடை வை எம். எம் ஏ சங்க ஆதரவில் ஜனாப் எம். எம். ஆரீப் அவர்களது தலைமையில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொண்டாடப் பட்டது. அவ்வமயம் ஜனாப்களான எச் எம். உஸ்மான் ஏ எம். ஜெமீன், ஈ எல். எம். ஹாசீம் ஆகியோர்களால் சொற்பொழிவாற்றப்பட்டு இறுதியில் ஜனாப் ஏ. எஸ். எம். தாஹிர் அவர்களின் வந்தனோபசாரத்தோடும் சிற்றுண்டி வழங்கப்பட்டும் கூட்டம் இனிது சமர்த்தியாயிற்று.

### கஹட்டோவிட்ட

கஹட்டோவிட்ட பாலயன் மீலாத் கமிட்டியினரின் ஆதரவின்கீழ் கடை வீதி முற்ற வெளியில் சென்ற 29-11-52ல் கே. கே காஸீம் ஆசிரியர் தலைமையில் அதிவிமரிசையாய் கொண்டாடப்பட்டது. கூட்டத்தில் மௌலவி எம் ஏ எம். நயீம் ஆலீம் ஸாஹிப் மௌலவி ஏ. எம். மசூது ஆலீம் ஸாஹிப் மௌலவி ஆர். ஓ. எம். யூசுப் ஆலீம் ஸாஹிப் எம். எம். தஸ்லீம் எம். எல். எம். அவ்பு என்பவர்களால் பிரசங்கங்களும் எச். எம் உஸ்மான் ஏ எம் முஸ்தபா ஏ. எல். எம் நியால் என்பவர்களால் இன்னிசைக் கீதங்களும் பாடப்பட்டது நிகழ்ச்சிகள் யாவும் ஒலிபரப்பப்பட்டன.

### வறக்காப்பொளை

வறக்காப்பொளையில் 30-11-52 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நபிகள் நாயக ஜயந்தி விழா ஜனாப் எஸ். ஐ. அஸீஸ் அவர்களின் தலைமையில் ஜனாப் ஏ ஆர் எம் ஜுனைத் ஆலிம் சாஹிப் அவர்களின் கிராஅத்துடன் ஆரம்பமானது.

நபிகள் நாயகம் அவர்கள் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி மௌலானா மௌல்வி ஹஸ்ரத் அலியார் மரிக்கார் ஆலிம் சாஹிப், தலைமையாசிரியர் ஜனாப் ஏ எச் முஹம்மது, அல்ஹாஜ் எம் ஏ எம் அப்துல்ஹஸன் ஜே பி முதலியவர்கள் விரிவாகப் பேசினார்கள். பின் சிற்றுண்டி விருந்துடனும் ராதிஹாவுடனும் கூட்டம்இனிது முடிவுற்றது.

### வேருவலை

"அக்கால இருளடைந்த அரேபியாவை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தோதனையாலும், சாதனையாலும் உலகத்கே தலைமை தாங்கச் செய்தார்கள். அவரது சிறந்த முன்மாதிரியை நாமும் பின்பற்றி முன்னேற இன்றே 'ரதிக்ஞை கொள்வோமாக" என்று மௌலவி டி எஸ் ஆர் பஸாலுத்தீன் சாஹிப் அவர்கள் கடந்த சனிக்கிழமை மாலை வேருவலை (சீனன் கோட்டை) வை எம் எம் ஏ ஆதரவில் நடைபெற்ற திருநபி (ஸல்) ஜெயந்தியில் சொற்பெருக்காற்றுகையில் குறிப்பிட்டார்.

ஜனாப் ஏ ஸி ஏ வதூத், ஜே பி (காதி கொழும்பு) தலைமைதாங்கினார் ஜனாப் எம் எஸ் எம் யூஸூப் அவர்களின் கிராஅத்துடன் நடவடிக்கைகள் ஆரம்பமாயின ஜனாப் டி எம் பீர்முகம்மது ஜனாப் எம் லாபிர் காசிம் (காரியதரிசி அகில இலங்கை வை எம் எம் ஏ இயக்கம்) ஜனாப் எஸ் எல் எம் ஏ காதர் ஆகியோசர் சொற்பெருக்காற்றினர்.

தீபாலங்காரங்கள் செய்யப்பட்டிருந்ததோடு கூட்டத்துக்குப் பெருந்திரளான முஸ்லிம் மாதர்களும் சமூகமளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### "முஸ்லிம் மஞ்சரி"

சென்னையிலிருந்து வெளியாகும் "முஸ்லிம் முரசு" என்ற பத்திரிகையின் கௌரவ ஆசிரியராக இருந்தவரும, பிரபல எழுத்தாளருமான அல்-ஹாஜ் வி. எம்.

11-ம் பககம் பார்க்க)

## காதிமார் சபை

### 15·11·52ம் திகதி அப்பீல் தீர்ப்பு முடிவுகள்

| அப்பீல் இல: | பகுதி: | காதிக்கோர்ட்டு இல: | தீர்ப்பு |
|---|---|---|---|
| 516 | கேகாலை | 122 | அப்பீல் முறையீடு தள்ளப்பட்டது |
| 528 | கரவாகு | 4788 | ,, |
| 529 | களுத்துறை | 754 | ,, |
| 530 | கொழும்பு (மருதானை) | 4220 | ,, |

### விவாதிக்கப்பட வேண்டியவை

அப்பீல் ஜாபிதா 13-12-1952 காலை 10 மணி

| அப்பீல் இல: | பகுதி | காதிக்கோர்ட் இல: | கட்சிக்காரர்கள் விவாதிக்கப்பட வேண்டியவை | வழக்கின் தன்மை | காதிக்கோர்ட் உத்தரவு |
|---|---|---|---|---|---|
| 531 | கொழும்பு (கொம்பனித் தெரு) | 5469 | அப்துல் மஹமத் கதீஜா உம்மா (அப்பீல்தார்-வாதி) அப்துல் மஜீத் மஹமக் அன்சாரி (பிரதிவாதி) | பராமரிப்பு | அப்பீல் அனுமதிக்கப்பட்டது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனக்குரல்

### அநீதி ஒழிய வேண்டும்!

இந்த நாட்டில் நீண்ட காலமாக வசித்துவரும் இந்தியர் பலரை, கண்ட கண்ட இடங்களில் பிடித்து கைதி செய்து நாடு கடத்துவது சர்வ சாதாரண ஒரு சம்பவமாகிவிட்டது. இது அதிகாரத்தை துஷ்பிரயோகப் செய்வதுமட்டுமல்ல. அக்கிரமமான ஒரு செயல் என்றுகூட துணிந்து சொல்லலாம்.

இந்த அதிகார துஷ்பிரயோக அக்கிரமத்தைப்பற்றி சமீபத்தில் நீதிபதி ஒருவர் தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒன்றுமறியாத அப்பாவிகளை திடீர் திடீரென பிடித்து நீ கள்ளத் தோணிக்காரன் இல்லையா என்று மிரட்டினால் துணிச்சல் இல்லாதவர்கள் என்ன செய்வார்கள். "கள்ளத்தோணி"யில் வராவிட்டாலுமே போலீஸாருக்குப் பயந்து "கள்ளத் தோணி" என்று ஒப்புக்கொண்டுவிகின்றனர். சட்டத்தின் மூலம் கோர்ட்டில் "கள்ளத்தோணி" என்று ருசுப்படுத்த முடியாமல் அவர்களைப் பிடித்து உடனே நாடு கடத்திவிடுகின்றனர். இந்த அநீதி ஒழியவேண்டாமா?

சமீபத்தில் கொழும்பில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன் எனது நண்பர் ஒருவர் சில நாட்களுக்கு முன் அவரது உறவினர் ஒருவர் வீட்டுக்குப் போயிருந்தார். அகாலமாகிவிட்டபடியால் அன்று இரவு அங்கு தங்கி அதிகாலை 4 மணிக்கு எழுந்து தூரத்திலுள்ள தனது வேலைத் தலத்துக்கு பயணமானார். போகும்போது தமது நண்பர் வீட்டிலே தமது சொந்த அரிசி கூட்பன் புத்தகத்துக்குப் எடுத்துவைத்திருந்த அரிசினையும் தம்முடன் எடுத்துச் சென்றுராம். வழியில் ரோந்து சுற்றிவந்த போலீஸார் அவரைப் பிடித்து மிரட்டி அரிசி ஏது என்ற கேட்டபோது அவர் உண்மையைச்சொல்லி எவ்வளவோ மன்றாடியும் போலீஸார் அவரை விட்டபாடில்லை. இறுதியில் அவர் தண்டிக்கப்பட்டதாக தெரிகிறது.

இதுபோன்ற பல சம்பவங்களை தினசரி கேட்டும் பார்த்தும் வருகிறோம். ஏழை இந்தியர் இந்நாட்டில் வடிக்கும் இரத்தக் கண்ணீருக்கு விமோசனமே இல்லையா? இந்தியர் என்ற காரணத்துக்காக நீதியும் நேர்மையும் குழி தோண்டிப் புதைக்கப்படுகிறதா?. இதுதான் புத்தர் பிரான் போதித்த அஹிம்சா தர்மத்தின் லட்சணம் போலும்.

இங்ஙனம்
பி. பெரியசாமி.
கொழும்பு-3.


# சுதந்திரன்
SUTANTHIRAN

194எ, தட்டாதெரு — போன்: 3411

1952 டிசம்பர் மீ 14உ


# சுதேச வைத்தியத்தில் விதேச மருந்துகள்

சித்த, ஆயுர்வேத, யூனனிபோன்ற சுதேச வைத்திய முறைகளில் பல்லுட்ரீன், ஸ்ரெப்டோமைஸின் ஓரியோமைஸின், பென்ஸிலின், எம் அன்ட் பி கந்தகத் தயாரிப்புகள், ஊசி மருந்துகள் ஆகிய மேல்நாட்டு ஔஷதங்களை உபயோகிக்கலாமா, வேண்டாமா என்ற பிரச்னை விசேஷமாக சுதேச வைத்தியர்களிடையேயும் பொதுவாக நாட்டு மக்களிடையேயும் இப்போது கிளப்பப்பட்டிருக்கிறது

அரசாங்க ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் தலைமை ஆசிரியரான டாக்டர் ஆர். பி. லெனோரு சுதேச வைத்திய அபிவிருத்திக்கென வகுத்த ஒரு திட்டத்தில் விதேச மருந்துகளின் உபயோகத்தை சுதேச வைத்தியர்களுக்குப் போதிக்க வேண்டும் என்றும் மேல்நாட்டு மருந்துகளைப் பிரயோகிக்க சுதேச வைத்தியர்களுக்கும் அனுமதி வழங்க வேண்டுமென்றும் கூறியுள்ளதாகத் தெரிய வருகிறது

டாக்டர் லெனோருவின் இந்த யோசனையை தங்கள் பிழைப்புக் கெட்டுவிடுமே என்ற காரணத்தினால் டல ஆங்கில முறை டாக்டர்கள் மூர்த்தண்ணியமாக எதிர்க்கிறார்கள் இதைப்போன்ற வேறு பல எதிர்ப்புகளையெல்லாம் சமாளித்து டாக்டர் லெனோரா ஆயுர்வேத கல்லூரிக்கு கொண்டுவரும் இதர திருத்தங்களை நாம் பெரிதும் வரவேற்கிறோம். ஆனால் சுதேச வைத்தியத்துள் விதேச மருந்துகளைப் புகுத்தும் வேலையையும், மேலைநாட்டு மருந்துகளுக்கு இணையான மருந்துகள் சுதேச வைத்திய முறைகளில் கிடையாவெனும் அவர் கூற்றையும் யாரும் ஆராயாமல் ஏற்றுக்கொள்ள முடியாது.

மேல்நாட்டு மருந்துகளைப்பற்றி சுதேச வைத்தியர்கள் அறிந்துகொள்வதனால் கெடுதல் ஒன்றும் இல்லை. அவற்றின் தன்மை, உபயோகம், குணம் முதலியவற்றை அவர்கள் நன்றாகப் படிக்கலாம். ஆனால் அவற்றை உபயோகித்தால் அன்றி கொடிய வருத்தங்களைத் தீர்ப்பது சாத்தியல்ல என்ற நிலைமையையும் மனோபாவத்தையும் ஏற்படுத்துவது தான் கூடாது. அப்படி ஏற்பட்டால் சுதேச வைத்தியம் ஒருபோதும் வளர்ச்சியடையாது. சுதேச வைத்தியர்கள் படிப்படியாக உருமாறி ஆங்கில முறை வைத்தியர்களாகிவிடுவார்கள். க்ஷீணதசையில் குற்றுயிராய்க் கிடக்கும் சுதேச வைத்தியம் நீட்டி நிமிர்ந்துகொண்டு இறந்துபடும் சுதேச வைத்திய பரிபாலனம் குட்டிச்சுவராய்ப் போய்விடும். மொத்தத்தில் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாய் முடியும்.

சுதேச வைத்தியம், மேல்நாட்டு வைத்தியம் இரண்டையும் எடுத்துக்கொண்டு இவற்றில் எது சிறந்தது? எது தாழ்ந்தது? எது வேண்டும்? என்று கேட்டால், இரண்டுமே சிறந்தன, இரண்டுமே வேண்டும் என்றுதான் சாதாரண அனுபவத்திலிருந்து பதில் சொல்ல வேண்டியிருக்கும். சுதேச வைத்தியரால் கைவிடப்பட்ட நோயாளர் பலரை மேலைநாட்டு முறை வைத்தியர் குணப்படுத்தியிருப்பதையும், டாக்டர்கள் நிறக் கலவையும், ஊசி மருந்தும், சத்திர சிகிச்சையும் செய்து பயனற்றுப்போன பிணியாளர் பலரை சுதேச வைத்தியர் சுகஸ்தர்களாக்கியிருப்பதையும் நாம் காண்கிறோம்.

வாத ரோகங்கள், பீனிசவகைகள், விஷக்கடி, முறிவு ஆதியன சுதேச வைத்திய முறைப்படி பரிபூரணமாகச் சொஸ்தம் செய்யப்படுகின்றன. இந்த் நோய்களை செவ்வனே தீர்க்கும் ஆற்றல் மேல்நாட்டு வைத்தியத்திற்கு கிடையாதென்பது பகிரங்க இரகசியம்.

அதேபோல் ஹிருதய ரோகங்கள், சுவாச ரோகங்கள், ரண சத்திர ரோகங்கள் கண்நோய்கள் முதலியவற்றை மேல்நாட்டு வைத்திய முறையும் மருந்துகளும் அற்புதமான வகையில் தீர்த்து வைக்கின்றன.

ஒரு நோயை உடனடியாக அல்லது குறைந்த காலத்தில் தீர்க்கும் வலிமை மேல் நாட்டு மருந்துகளுக்கு உண்டென்றும் ஒரு நோயை பிறிதொரு நோயாக மாற்றாமல் வேரோடு வெளியேற்றும் திறமை சுதேச மருந்துகளுக்கு விசேஷமாக சித்த வைத்தியத்திற்கு உண்டென்றும் அனுபவத்தில் கருதப்படுகிறது.

எனவேதான் இந்த வைத்தியத்தைவிட அந்த வைத்தியம் சிறந்தது என்றோ, அந்த வைத்தியத்தைவிட இந்த வைத்தியம் சிறந்தது என்றோ கூறுவதும் சவால் விடுவதும் [illegible]

சுதேச வைத்தியர்களின் கையில் மேல்நாட்டு மருந்துகளை கட்டுப்பாடின்றிக் கொடுப்பதிலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. உதாரணமாக ஸ்ரெப்டோமைஸின் என்ற மருந்தை எடுத்துக் கொள்வோம். இது க்ஷயரோகத்திற்கு மிகவும் உன்னதமான மருந்து என்று கொள்ளப்படுகிறது. ஆனால் ஒரு வகை க்ஷயரோகத்திற்குத்தான் ஏற்றதாம். க்ஷயரோகத்தில் எத்தனையோ வகைகள் இருக்கின்றன. சுவாசப் பையில் காற்றைப் பிரயோகிக்கும் ஏ. பி சிகிச்சையின் மூலம் குணமாகும் ஒருவகை க்ஷயரோகம் உண்டு. இதற்கு ஸ்ரெப்டோமைஸினைப் பிரயோகித்தால் நோயாளியின் உயிருக்கே பங்கம் ஏற்படலாம். எனவே ஸ்ரெப்டோமைஸின் பிரயோகிக்கக் கூடிய க்ஷயரோகம் எது என்பதைத் தீர்மானிப்பதற்கு விசேஷ அறிவு வேண்டும். அதுவும் விசேஷ தரிசினிக் கருவிகளின் மூலம் க்ஷயரோகியின் மலம், சலம், இரத்தம், சளி முதலியவற்றைப் பரிசோதனை செய்து, நோயாளியை சில காலம் அவதானத்தில் வைத்து, எக்ஸ்ரே படம்பிடித்து கண்டறிய வேண்டியிருக்கும். இந்த நிலைமையில் சரியான நோய் நிதானம், நோயின் இனம் முதலியவற்றைக் கண்டுபிடிப்பதற்கு மேலை நாட்டு வைத்தியக் கருவிகளின் பரிச்சயம் இல்லாத ஒருவரிடம் ஸ்ரெப்டோமைஸினைக் கொடுப்பது குரங்கின் கையில் க்ஷவரக் கத்தியைக் கொடுத்த கதையாக முடிந்தாலும் முடியலாம்.

இதே போலவே மேல் நாட்டு வைத்திய முறையைமட்டும் கற்றவர்கள் சில கடுமையான சுதேச மருந்துகளை ஆராய்வின்றி உபயோகிப்பதனால் நோயாளியின் குடலைப் புண்படுத்தியும், பற்களை நாசம் செய்தும் அபாயப் பரிசோதனை நடத்திய பல சந்தர்ப்பங்களுண்டு.

வைத்தியம் என்பது மனித உயிரோடு ஊடாடும் பொறுப்பும் உத்தரவாதமும் உபகாரமும் வாய்ந்த ஒரு சிறந்த கலையாகும். இதை விளையாட்டாகச் செய்துவிட முடியாது. எனவே விதேச மருந்துகளை சுதேச வைத்தியத்துள் புகுத்துவது நன்றா, அன்றா என்பதை இரு சார்புள்ள வைத்தியர்களும், பொது மக்களும் நன்கு சிந்தித்து முடிவு செய்வார்களாக.

# வட இலங்கையில் பலரகப் புயல்கள்

"சூயா"

பாராளுமன்ற அரசியல் புயலிலகப்பட்டு சிறிது காலம் பத்திரிகை எழுத்தை முற்றாக மறந்துவிட்டிருந்த எனக்கு வட பகுதியில் நடந்த பெரும் புயல் கொஞ்சம் பழைய ஞாபகத்தை உண்டாக்கிவிட்டிருப்பதினாலே எல்லாப் பத்திரிகை நிருபர்களும் எழுதி எழுதிச் சலித்துப்போன இந்தப் பெரும் புயலின் திருவிளையாடல்களைப்பற்றிச் சிறிது எழுதலாமென்று எண்ணி இதை எழுதுகின்றேன்.

வடபகுதியில் பெரும்புயலடிக்குமுன் கொம்யூனிஸ்ட் சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்வதைப்பற்றி அரசியல் வட்டாரங்களில் ஒரு பெரும் புயலடித்தது, அதன்பின் இந்தப் புயல் வந்து வட பகுதி மக்களைப் படாத பாடுபடுத்தி வைத்தது.

## அந்தரங்க சூறாவளி

பகிரங்கமாக அடித்த இந்தப் புயல்களைவிட இந்திய ஏழை மக்களை இலங்கையினின்றும் வாரிக்கொண்டு போகின்ற மற்றொரு அந்தரங்க சூறாவளியும் இலங்கை முழுவதும் அடித்துக்கொண்டிருப்பதைப்பலரும் அறிவார்கள். கண்ட இடங்களிலெல்லாம் இலங்கைவாழ் ஏழை இந்திய மக்கள் வேட்டையாடப்படுகின்றனர்.

சாவகச்சேரியில்கதம்பைக் கயிற்றால் பிணைத்து நிரைக்கு நாற்பது ஐம்பது பெயர் வீதம் இரண்டு நிரையில் பெண்டு பிள்ளைகளோடு பல இந்தியத் தொழிலாளர்களைப் போலீசார் இரண்டு மூன்று தடவை சாவகச்சேரிக் கோர்ட்டுக்கு அழைத்துப் போனதை நான் கண்டேன். விசாரித்தபோது இவர்களெல்லாரும் கிளிநொச்சி, பரந்தன் முதலிய இடங்களில் கமத்தொழில் செய்யும் இந்தியத் தொழிலாளர்கள் என்று எனக்குச் சொன்னார்கள்.

## யாழ்ப்பாணத்துக்கு நஷ்டம்

இப்படிக் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள இந்தியத் தொழிலாளர்களை சர்க்கார் வேட்டையாடுவதால், இந்தியத் தொழிலாளிகளிலும் பார்க்கப் பெரு நஷ்டமடையப்போகின்றவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள்தான். "நெல் விலையைப் பன்னிரண்டு ரூபாவுக்கு உயர்த்திக் கமக்காரராகிய உங்களுக்கு மிகப் பெரிய நன்மையைச் செய்திருக்கின்றோம்பார்த்தீர்களா!" என்று மார்தட்டி வீறுப்புப் பேசும் எம். பீக்கள் கூட இதை அறிவார்களோ என்பது சந்தேகம் யாழ்ப்பாணத்திலுள்ள பலருக்கு கிளிநொச்சி, பரந்தன் முதலாமிடங்களில் பல ஏக்கர்க் கணக்கில் விளை நிலங்களுண்டு இந்த விளை நிலங்களிலெல்லாம் வேலை செய்பவர்கள் இந்தியத் தொழிலாளர்கள். மலைநாடுகளில் வெள்ளையரையும், சிங்களப் பிரபுக்களையும் குபேர வாழ்வு வாழ்விப்பதற்காக, அட்டைக்கடியையும், காட்டுக்காய்ச்சலையும் சகித்துக்கொண்டு சொற்ப கூலிக்காக உடம்பைக் கயிறாகத் திரித்துத் தேயிலை, ரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்களைப்போல, கிளிநொச்சி பரந்தன் முதலாமிடங்களிலும் யாழ்ப்பாணத்தவரின் வாழ்வுக்காக இந்தியத் தொழிலாளர்கள்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இதர மதங்களை இகழும்படி இஸ்லாம் போதிக்கவில்லை

## கற்பிட்டியில் ஆசிரியர் தாவூத்ஷா பேச்சு

"இஸ்லாம் ஒரு இயற்கை மதம்; சடங்கையற்ற சாந்தி மார்க்கம். இதர மதஸ்தர்களை இகழ்வதோ தூஷிப்பதோ முகம்மது நபி ஸலலல்லாகு அலைகுவஸல்லம் அவர்களின் புனித கொள்கைகளுக்கு அடுக்காச் செயல்களாகும். இஸலாத்தின் சீரிய தத்துவங்களை எடுத்தோதவேண்டியது நமது கடன். அதில் பற்றுக கொண்டவர்கள் அதைப் பினபற்றலாம். மக்களை வற்புறுத்தி வலிந்திழுகக வேண்டியதில்லை. ஆரம்பத்தில் ஐந்து பேர்தானும் பினபற்றுவதற்குத் தயங்கிய இம்மதம் இன்று பூவுலகத்தின் ஐந்திலொரு பகுதி மக்களை வசீகரித்திருக்கிறது. இதரர்களையும் கவர்ந்து ஏக சகோதரத்துவத்தை நிலைநாட்ட இஸ்லாத்தின் இயற்கை சக்தியே வலிமையுடையது" என்று இஸ்லாமிய தத்துவவித்தகரும் 'தாருல் இஸ்லாம்" ஆசிரியருமான அல்ஹாஜ் பா. தாவூத்ஷா கடந்த வெள்ளிக்கிழமை கற்பிட்டியில் வெகு விமரிசையாக நடைபெற்ற நபிதின விழாவில் பேசினர்.

விழாவிற்கு அன்பர் பூபதிதாஸர் தலைமை வகித்துப் பேசுகையில் முகம்மது நபி அவர்கள், மனிதர்கள் மனிதர்களாய் வாழ்வதற்கு வழி வகுத்தவர்கள் என்றும் இந்த நாட்டில் வாழப்பிறந்த மக்கள் கர்ப்பத்தடை முதலியவற்றில் ஈடுபட்டு ஜன உற்பத்தியைக் குறைத்துவிடலாகாதென்றும் இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் இனம் தொகையில் குறைந்துகொண்டுபோவதால் அவர்கள் உற்பத்தியை அதிகரித்து என்றாவது ஒரு நாள் ஒரு தமிழரோ ஒரு முஸ்லிமோ இந்த நாட்டின் பிரதம மந்திரியாக வரவேண்டும் என்றும் கூறினர்.

"தாருல் இஸ்லாம்" உதவி ஆசிரியர் ஜனாப் ஜப்பார், திரு எஸ். டி. சிவநாயகம், ஜனாப் வி. எம். ஷம்சுத்தீன், திரு மரியாம்பிள்ளை ஆசிரியர் ஆகியோரும் இவ் விழாவில் கலந்து சொறபொழிவாற்றினர்.



இம்மாதம் 5-ம் திகதி கற்பிட்டியில் நடைபெற்ற நபிதினவிழாவில் (இடதுபுறம்) சென்னை "தாருல் இஸ்லாம்" ஆசிரியர் அல்ஹாஜ் பா. தாவுதஷா அவர்களும் (வலதுபுறம்) கூட்டத்திற்கு தலைமைவகித்த சங்கைக்குரிய அன்பர் பூபதிதாஸர் அவர்களும் பேசிக்கொண்டிருப்பதைக் காண்க (கீழேயுள்ள படம், அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையின் ஒரு காட்சி.

## ரஞ்சிதம்......................

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் பாக்டரி தீப்பிடித்தெரியும் விந்தையைக் கண்டுகளிக்கவந்த அழகு மனோகரனின் கண்ணில்பட்டான். மனோகரன் அவனை அணுகி "என கூட ஒரு அம்மா வந்திருந்தாங்களே, உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான். அழகு அக்கம் பக்கத்தில் யாராவது நிற்கிறார்களா என்று பார்த்துவிட்டு "செகப்பா, உசரமா, அழகா.........." என்று கூறி முடிப்பதற்குள் "ஆமா! ஆமா? அவுங்கதான் அவங்களை நீ பார்த்தியா?" என்று அவசரப்பட்டான், கத்தரிப்பூ நிறத்திலே ஒரு பட்டுப் பிடவை கட்டிண்டு, கையிலே ஜோரான ஒரு கடியாரம் மாட்டிண்டு......" அழகு வர்ணிக்கலானன். மனோகரன் பொறுமை இழந்தவனாக "அந்த அம்மாளேதான். அவங்கள் எங்கே இருக்கிறுங்க சொல்லேன்" என்ருன். "அது பெரிய இரகசியமுங்க நான் சொல்லமாட்டேன்" என்று சொல்லிக்கொண்டு அழகு அங்கிருந்து நழுவலானன்.

அப்பொழுது மீனாட்சி அந்தப் பக்கம் வந்துகொண்டிருந்தாள். மனோகரனுக்கு மீனாட்சியை தெரியுமல்லவா? ஆகவே அவன் அவளை சமீபித்து "அம்மணி, என்கூட ஒரு ஸ்திரீ வந்திருந்தாளல்லவா? அவளை நீங்கள் கண்டீர்களா?" என்று கேட்டான். "அந்த அம்மாளைப்பற்றிய செய்தியைச் சொல்லத்தான் நான் இங்கு வந்தேன். கூட்டத்தில் கலகம் உண்டாகி ஜனங்கள் திக்குக்கொருவராக ஓடினர்களல்லவா? அப்பொழுது நாலு முரட்டு மனிதர்கள் அந்த அம்மாவைத் தூக்கி ஒரு காரில் ஏற்றிச் சென்ருர்கள். இந்தப் பாதையாகத்தான் கார் சென்றது. கார் துரை பங்களாவுக்கு போயிருக்க வேண்டும் அல்லது கண்டிக்கு பிரேமாவதி வீட்டுக்கு போயிருக்கவேண்டும்' என்று மீனாக்ஷி கூறி முடிப்பதற்குள் சிவபாலன் மீனாக்ஷியைப் பார்த்துவிட்டு அந்த இடத்துக்கு வந்தான். மனோகரன் சிவபாலனின் கைகளைப் பற்றிக்கொண்டு "தம்பி என்னோடு வந்த ரஞ்சிதம் என்ற பெண மணி ஆபத்தில் சிக்கியிருக்கிறாள். நீயும் இவங்களுமாக (மீனாக்ஷியைக் காட்டி) துரை பங்களாவுக்குப்போய் அங்கு ரஞ்சிதமிருந்தால் அவளைக் காப்பாற்றி வெளியேற்றுங்கள். நான் பிரேமாவதி விட்டுக்குப் போறேன்" என்று கெஞ்சும் குரலில் கேட்டான். சிவபாலன் அவ்வண்ணமே செய்வதாக உறுதி கூறினன் மனோகரன் காரில் கண்டிக்குப் புறப்பட்டான்.

மனோகரன் பிரேமாவதி வீட்டை அடைந்தபொழுது கதவுகள் திறந்தேயிருந்தன அவன் அவசர அவசரமாக பங்களாவுக்குள் நுழைந்தான். நுழைந்ததும் அவன் கண்ட காட்சி அவனைத் திகிலடையச்செய்தது பிரேமாவதி இரத்த வெள்ளத்தில் அலங்கோலமான நிலையில் கிடந்தாள். மனோகரன் அவளை அணுகிப் பார்த்தபொழுது அவள் சாகவில்லையென்பது தெரிந்தது. மனோகரனைக் கண்ட பிரேமா பரக்கப் பரக்க விழித்தாள். மனோகரன் அவளை நோக்கி, "உங்களுக்கு யாரால் இது நேர்ந்தது" என்று கேட்டான்.

"டக்ளஸ் துரை என்பவன், என் கணவனைக் கொன்ற பாவி. நான் அவனுடைய வைப்பாட்டியாக இருந்தேன். சில தினங்களுக்குமுன்னர் ஆத்திரத்தினால் "என் கணவனைக் கொன்ருயல்லவா?" என்று அவனைக் கேட்டுவிட்டேன். தன்னைக் கொலைகாரன் என்று கூறிய நான் இனி உயிரோடிருக்கலாகாதென்று கூறி சற்று முன்னதாக அதோ அந்த ரிவால்வரால் என்னைச் சுட்டான்" என்று பிரேமாவதி தட்டுத் தடுமாறிச் சொன்னாள். பக்கத்தில் கிடந்த ரிவால்வரைக் கையில் எடுத்துக்கொண்டு, ரஞ்சிதம் இங்கு கொண்டு வரப்பட்டாளா? என்று கேட்டான் மனோகரன் பிரேமாவதி, 'ரஞ்சிதம்.........ரஞ்சிதம்......" என்று ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்கிடையில் அவளுடைய விழிகள் பிதுங்கின. தொண்டையடைத்துக்கொண்டது. மூச்சுத் திணறியது "அம்மா" என்ற முனகலுடன் அவளுடைய ஆவி பிரிந்தது.

மனோகரன் கையில் ரிவால்வருடன் ஒவ்வொரு அறையாகச் சென்று தேடினன் ரஞ்சிதத்தை எங்கும் காணவில்லை. "எங்கே கொண்டுபோயிருப்பார்கள்?" என்று சிந்தித்த வண்ணம் மனோகரன் வாயிலை நோக்கி வந்துகொண்டிருக்கையில் வாசலில் "தட தட"வென்று பூட்ஸ் சப்தம் கேட்டது. ஒரு போலிஸ் இன்ஸ்பெக்டரும் மூன்று கான்ஸ்டபிள்களும உள்ளே நுழைந்தார்கள. மனோகரன் ஸ்தம்பித்து நின்று விட்டான் இன்ஸ்பெக்டர் முதலில் பிரேமாவின் பிரேதத்தைப் பார்த்தார். பிறகு மனோகரனைப் பார்த்தார். மனோகரன் கையிலிருந்த ரிவால்வரைப் பிடுங்கிக்கொண்டு கான்ஸ்டபிளுக்கு சைகையினால் ஏதோ கூறினர். அந்த கான்ஸ்டபிள் பாக்கெட்டில் வைத்திருந்த விலங்கை எடுத்து மனோகரனின் கையில் மாட்டினன்.

### நமுனு கொல்லையில் பொது வேலை நிறுத்தம் தோட்டத்துரை மீது வழக்கு


நமுனுகொல்லையில் கந்தஹேனத் தோட்டத் தகராறு புதிய கட்டத்தை அடைகிறது. விசாரணை அதிகாரி நடத்திய விசாரணையின்போது சம்மன் அனுப்பியும் ஆஜராகாத குற்றத்திற்காக கந்தஹேனத் தோட்டத் துரைமீது [illegible] திங்கட்கிழமையன்று கோர்ட்டில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்யுமென்று தெரிகிறது.

இதே சமயத்தில் நமுனுக்கொல்லைப் பகுதி தோட்டங்களில் ஒருபொது வேலைநிறுத்தம் செய்வதற்காக ஏற்பாடுகள் நடைபெறுவதாக செய்தி கிடைத்திருக்கிறது. கந்தஹேன தோட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் காட்டுவதற்காகவும், இத்தகராறைப்பற்றி பொதுமக்கள் கவனத்தை திருப்புவதற்காகவும் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையில் சமீபத்தில் பொதுவேலைநிறுத்தம் ஏற்படலாம்.


கண் பார்வை

தெளிவடைய

ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்



உபயோகத்தினுல் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது மேலும் இத்தைலத்தின் உபயோகத்தால் கண்சிகப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் அரிப்பு, கண்பார்வை குறைவு, கண் கூச்சம், கண்ணில் பீளை சாடுதல், கண் வலி, கண் குத்து, வெள்ளெழுத்து, ஒருதலைவலி, கைகால் தேக எரிச்சல், மண்டையிடி, மூலச்சூடு, அஸ்திகாங்கை, கெர்ப்பச்சூட்டால் உண்டாகும் திரேக காந்தல், காதுநோய், காது செவிடு, காதுஇரைச்சல், காதில் சீழ்வடிதல, பீனிசம், தடுமல், மூக்கிலிருந்து நீர்வடிதல், மயக்கம், தலைமயிர் உதிர்தல், செம்பட்ட மயிர், பித்தநரை முதலியவைகளை ஆச்சரியமாய் குணம்செய்யும், கூந்தல் நன்றாய் வளரும். இத்தைலத்தை உபயோகித்த எவரும் குணமில்லை என்று சொல்ல முடியாது ஆகையால் நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். உண்மை விளங்கும்.

புட்டிக்கு ரூ. 3/- தபால் செலவு சதம் 85.

ஞானசுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

**இந்தக் கதையின் கரு எந்த உலகத்திலிருந்தும் கிடைத்ததல்ல, நாம் வாழ்கிற இந்த உலகத்திலிருந்து தான் கிடைத்தது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட கதை இது.**

# ★ துணிச்சல்

'துன்பச்சூழல்'

அவள் வாய்விட்டுக் கதறவில்லை. எதிர்காலத்தையிட்டு அவள் தன் இதயப் படுதாவில் தீட்டிய கனவுச் சித்திரங்களைக் கரைத்துவிட்டு வருவதுபோல கண்களில் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது:

'நீயின்றி நானில்லை" என்று அன்பு ததும்ப அவள் கூந்தலை வருடியபடி வாத்ஸல்யத்துடன் அவன் சொன்ன சொல் இன்னும் அவள் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது. ஆனல் அவள்தான் தனியே இருந்தாள்; அவனைக் காணேம். அந்த அமுத மொழி இன்று நஞ்சாய்ப் போய்விட்டது.

காலையிலே வெறும் தேநீர் மட்டும் அருந்திவிட்டு வேலை தேடப் புறப்பட்டவன்— அப்படிச் சொல்லிப் போனவன்— அவளில்லாமலே அந்தர்த்யானமாகிவிட்டான்! வேலைக்கு விண்ணப்பம் செய்துவிட்டு சித்தப்பா வீட்டுக்கு வந்திருந்த கோபாலன் வாய்க்கால் கரையிலே வளர்ந்த பசலைக் கொடி போல 'மொழு மொழு' என்று வளர்ந்திருந்த பார்வதியைக்கண்டு அவள்மேல் உள்ளத்தைப் பறிகொடுத்தபோது தன் எதிர்காலத்தைப்பற்றி எண்ணமலிருக்கவில்லை.

ஏழைதான்! என்ருலும் எஸ். எஸ். ஸி படித்த வாலிபன். இன்றில்லை என்ருல் நாளையாவது ஒரு வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தான்.

பார்வதியை அவள்பெற்ருேர் யாரோ ஒரு 'பண மூட்டை'க்கு இரண்டாந் தாரமாகக் கொடுக்க இருந்தார்கள். பார்வதியின்பெற்ருேருக்கு அந்தக் கல்யாணத்தில் பரம திருப்தி— அவர்களுக்கிருந்த கடனை வரப்போகிற மாப்பிள்ளை அடைப்பதாக ஒப்புக்கொண்டிருந்தான். ஆனல் பார்வதியின் ஒப்புதலை யாராவது எதிர்பார்க்கவேயில்லை

உண்மையில் பார்வதிக்கு அந்தக் கல்யாணத்தில் துளிகூட விருப்பமில்லை. ஆனல் பெற்று வளர்த்த தாய் தந்தையர்க்காகத் தன்னைத் தியாகம்செய்ய இருந்தாள்.

சஞ்சலம் மிகுந்த உள்ளத்தோடு இருந்த போதுதான், கோபாலன் அவள் அடுத்த வீட்டுக்கு வந்த சாக்கில் அவள் உள்ளத்திலும் புகுந்தான். ஒரு கன்னிப் பெண்—பெற்று வளர்த்த தெய்வங்களுக்கு என்றுமே துன்பமிழைக்கக் கூடாது. ஆனல், அவள் துணிந்து கோபாலனுடன் கிளம்பிவிட்டாள். அவனுக்கு கூட ஒரு வேலை இல்லை; என்ருலும் அவளை அழைத்துப்போக அவன் தயங்கவில்லை என்ன துணிச்சல்!

* * *

**ப**ட்டிணத்திலே- மணிமேகலை வசிக்கவில்லை; அவளுடைய பிக்ஷாபாத்திரம் கூட எந்தக் குப்பைத் தொட்டியிலும் கிடக்கவில்லை இருந்தால், கோபாலனுக்கும் பார்வதிக்கும் தினம் சாப்பாடு கிடைத்திருக்கும். அங்கே பஞ்சமும் பட்டினியும்தான் உத்தம நண்பர்களாக உலாவித் திரிந்தன.

பிறந்த மேனியோடு இருக்கக் கூடாதென்பதற்காக பார்வதியின் தந்தை அவள் காதிலே ஒரு தங்கத் தோடு போட்டிருந்தார். கோபாலன் கையிலே கிடந்த கடியாரத்துக்கு, அவன் படிக்கிற காலத்தில் அவன் தந்தை ஒரு தங்கச் செயின் போட்டிருந்தார். இரண்டும் மொத்தம் 250 ரூபா பெறுமதி வாய்ந்தவை!

"இன்றுவரும் நாளை வரும் என்று கோபாலன் வேலை"யை எதிர்பார்த்திருந்த மூன்று மாதங்களில் அந்த இரண்டு உருப்படிகளும் உருத்தெரியாமல் மறைந்துவிட்டன. அப்புறம் தனக்குத் தெரிந்த நண்பர்கள் சிலரிடம் "கொஞ்ச நஞ்சம்" கடன் வாங்கி அந்த இளம் தம்பதிகள் காலத்தை ஓட்டினர்கள். வீட்டு வாடகை, தொழில் தேடித்தரும் கந்தோரில் ஒன்றன்மேலொன்ருக அடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பத்திரங்கள்போல மேலே, மேலே ஏறீன.

நகை நட்டை விற்று மூன்று மாதம்—கடன் வாங்கி மூன்று மாதம்— இப்படி ஆறுமாதங்கள்எப்படியோ ஓடி மறைந்தன.

ஒரு நாள்..................

பார்வதி தலையைத் தாங்கிட் பிடித்துக் கொண்டு வாந்தி எடுத்தாள்.........

கோபாலன் நாலுபணம் சம்பாதிக்கவில்லையே தவிர நல்லதும் கெட்டதுமாக நாலு நூல்களைப் படித்தவன்; அதன் காரணமாக தன் சிந்தனை அகராதியைப் புரட்டி "பார்வதி வாந்தி எடுப்பதற்கு என்ன அர்த்தம்" என்று பார்த்தான்.

'பார்வதிக்கு மூன்று மாதம்' என்று தெட்டத் தெளிவாகப் பொருள் விளங்கிற்று பார்வதி அவனைப் பார்த்துச் சிரித்தாள். அதன் அர்த்தம் நீங்கள் சரியான ஆள்தான்' என்பது.. பதிலுக்கு கோபாலனும் அவளைப்பார்த்துச் சிரித்தான். அதன் அர்த்தம் 'நான் என்ன செய்வது' இப்படி வருமென்று எதிர் பார்க்கவில்லை என்பதாகும். மறுநாள் விடிந்ததும் பார்வதி தேனீர் போட்டுக் கொண்டுவந்தாள்.

"இதைக் குடியுங்கள்; சாப்பபாட்டுக்கு ஒன்றுமில்லை. கடவுள் கண் திறந்தால் மத்தியானம் பார்த்துக்கலாம்!' என்றாள்

"சாப்பாடு வேண்டாம் டீ மட்டும் போதும். ஒரு ஆபீஸிலே ஏதோ 'வேக்கன்ஸி' இருப்பதாகச்சொன்ஞர்கள்-பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று சொல்லி அந்த டீயைக் குடித்துவிட்டு கோபாலன் கடையிறங்கினுன்.

அப்புறம் அவன் திரும்பி வரவேயில்லை. கன்னிப் பெண்ணைக் கைப்பிடித்து அழைத்துவந்து அவளுக்கு வேறு சுமையைத் தந்துவிட்டு அவள் வாழ்விலிருந்தே அவன் மறைந்து போஞன்.

ஏன் துணிந்தான்?

வேலையில்லை அதனுல் வாழ முடியவில்லை.

* * *

**பா**ர்வதி கிராமத்துப் பெண்; தன் சக்திக்கேற்ற வரை படித்தவள்; புத்தி [illegible] என்றாலும் [illegible] போனுள்.

'கண் நிறைந்த கணவன் என்று எண்ணிக்கொண்டு ஒரு வேலையில்லாத வாலிபனைக் காதலிப்பதிலும் பார்க்க-வாழ்வின் எல்லைக் கோட்டில் நிற்கிற ஒரு கிழத்தைக்கூடக் கட்டித் தொலைக்கலாம்' என்று பட்டினத்தில் தன் நிற்கதியை நினைத்து பார்வதி ஏங்கினுள்.

இனி அவளுக்கு வாழ்வேது? வீட்டுக்குத்தான் போக முடியுமா? இல்லை- கோபாலன் அமர்த்திக் கொடுத்துவிட்டுப் போன வீடுதான் சாசுவதமா? வீட்டு வாடகைக்கு வந்து கழுத்தை நெரிப்பானே!

அவள் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தாள். இந்தப் பட்டணத்தைவிட்டு வேருெரு பட்டினம் அங்கே......அவளுக்கு வேலை கிடைத்தது. பாத்திரங்கள் கழுவுவது, மா அரைத்துக் கொடுப்பது, நெல் குற்றுவது...... இப்படி! இந்த வேலைகளின் காரணமாக அவளுக்கு உணவுகிடைத்தது. மாதத்தில் ஐந்தாறு ரூபா பணமும் கிடைத்தது

உறங்குவதற்குப் பட்டினத்தின் ஒதுக்குப்புறத்திலே ஒரு குடிசைகூடக் கிடைத்தது

அவள் தேய்ந்துகொண்டிருந்தாள். ஆனல் அவள் வயிற்றிலே இருந்த குழந்தை வளர்ந்துகொண்டே இருந்தது.

* * *

**ப**ஸ்ஸை மறித்து ஒரு பெண் ஏறினள் இளம் வயது, நாகரீகமாக உடுத்தியிருந்தாலும் அது இயற்கையாகத் தெரியவில்லை முகம் கன்றிச்சிவந்திருந்தது உடல் முழுதும் வேதனையின் ரேகைகள்! பார்த்தால் பச்சைப் பிள்ளைத்தாச்சி மாதிரி......கையிலே ஒரு அழகான சூட்கேஸ்! பஸ்ஸுக்குள்ளேதான் உலகப்! சீனுவிடமிருந்து அரிசி வாங்கியதைப்பற்றிய பிரச்னையில் ஒரு நாலைந்துபேர்- எகிப்தில் நாகிப் ஆட்சியைப் பற்றி இரண்டொருவர்- பழையனூர் பச்சையப்பா எழுதிய புதிய நாவல் 'பகற் கனவு' பற்றிய சர்ச்சையில் ஒரு இலக்கியக் கோஷ்டி-புதியதாகத்திரையிடப்பட்ட 'பேராசிரியை' என்ற படத்தில் நடித்த மல்லிகா தேவியின் நடிப்பைப்பற்றியும் அந்த அம்மையார் ஆடை விஷயத்தில் அதிக 'கஞ்சத்தனம்' செய்யாமல் கொஞ்சமாவது தாராளமாக நடந்துகொண்டதுபற்றியும் விமர்சிக்கும் ஒரு கலரிவர்க்கம்......

இத்தனை தொல்லைகளுக்கிடையில அந்தப் பெண்ணைச் சிலர்தான் கவனித்த

[11-ம் பக்கம் பார்க்க]

ஆனந்தா லேகியம்

இதன் குணததை ஒரேநாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174 ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலதலத சுகமாக கழித்து, அசதி, சோம்பல், மேல்கால் கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை பெரியது ரூ 5-75 சிறியது விலை ரூ 3-00 இத்துடன் "ஆனந்தா கீழ்காய்நெல்லிதலைதைலத்தை' தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் இனமாக அனுபபுவோம்.

பெரிது ரூ 5-75 சிறியது ரூ 3-00 வி பி பி செலவுவேறு

புரோப்ரைட்டர்:- M. பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174 C, செட்டியார் தெரு, கொழும்பு-11



## சிறு கதைகள்

எழுதியவர் எஸ். குருசாமி, தமிழ் நூல் நிலயம்:. ஷெனய்நகர், சென்னை. விலை அணு ஆறு.

ஒரு கட்சிப் பத்திரிகை ஆசிரியரின் லட்சியமாக மிளிரும் விடுதலை ஆசிரியர் எஸ். குருசாமி அவர்களின் எட்டுச் சிறு கதைகள் இத் தொகுப்பில் இருக்கின்றன. கலையே பிரசார சாதனந்தான் என்ருலும் அதன் கலையம்சம் குறையாமலும் பிரசாரம் பண்ண முடியும்; கார்க்கியைப் போல. ஆனல் பிரசாரத்தையே முக்கியமாக்கிக் கொண்டு கதைகளினிடையே குட்டிப் பிரசங்கங்கள் பண்ணும்போது அவைகளின் கலையழகு குறைந்து போய்க் கட்டவிழ்ந்த மணல் மூட்டைகள் போலத் தளர்ந்து சழிந்து போய்க் கிடக்கின்றன. எனினும் சுயமான சிந்தனையின் தங்குதடையற்ற ஓட்டம் கதைகட்கு ஓர் விறுவிறுப்பைக் கொடுக்கின்றது. அகஸ்மாத்தாக மார்வாடிக் கடை மறியலில் கலந்து கொள்ளும் பார்வதி (பணப்பேய் என்ற கதையில்) ஓர் அருமையான பாத்திரம் தவுல் தங்கசாமியும், அமிர்தமும் தமிழ் நாட்டில் இனியாவது பிரத்தியட்சமாக வரவேண்டிய பாத்திரங்களே 'கண்ணை உறுத்தும்' அட்டைப் படமோ, படோடோபமான முன்னுரையோ இல்லாத இச்சிறு நூலைத் 'திராவிட மக்கள்' சிந்திப்பதற்காகப் படிக்கலாம்.

—வ அ ரா.

## வீரபாண்டியக் கட்டபொம்மு

ஆசிரியை; வீ. சே. லீலா பி. ஏ; பி. டி. கிடைக்குமிடம்:—அருணு பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட், 175 A, லாயிட்ஸ்ரோட், இராயப் பேட்டை, சென்னை-14.

"வானம் பொழியுது
பூமி விளையுது
மன்னவன் கும்பினிக்
கேன் கொடுப்பேன்"

என்று சீறி எழுந்து தமிழ் நாட்டின் விடுதலைக்காகப் பெரும் போரிட்டு வீர மரணம் எய்திய வீர பாண்டிய கட்டபொம்முவின் சரித்திரமே இந்நூல்.

18-ம் நூற்ருண்டில் வெள்ளையரை எதிர்த்து கட்டபொம்மு ஆரம்பித்த விடுதலைப் போராட்டத்தை 1947 ல் மகாத்மா காந்தி வெற்றிகரமாக முடித்துவைத்தார்.

தென் பாண்டி நாட்டில் திருநெல்வேலி சீமையில் பாஞ்சாலம் குறிச்சியில் (பாஞ்சையில்) அரசு புரிந்த வீர பாண்டியர் அவரது சகோதரர் ஊமத்துரையுடன் 'கும்பினியாரை எதிர்த்து கடும்போர் புரிந்து, இறுதியில் புதுக் கோட்டை தொண்டைமானுல் காட்டிக்கொடுக்கப் பட்டு 1799-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் நாளன்று கயத்தாறு' என்னும் ஊரில் ஒரு புளிய மரத்தில்

[15-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சல்

[10-ம் பக்கத் தொடர்ச்சி]
னர். கடைசி ஆசனத்தில இருந்த ஒரு வாலிபன்சற்று அதிகமாகவே பார்த்தான்.

அவள் கையோடு தூக்கி வந்த சூட்கேஸ் அவன் கவனத்தை அதிகம் கவர்ந்தது.

என்ன?

அந்தப் பெண்தான் பார்வதி—அந்த வாலிபன் கோபாலன். மலரும் மணமும் போல பிரிக்க முடியாதவர்களென்றிருந்து, இன்று இரு துருவங்களாகிவிட்டவர்கள். அந்தச் சூட்கேஸ் கோபாலனுடையது. அவனைவிட்டு ஓடி வரும்போது அதை எடுத்து வந்தால் அவள் ஏதாவது நினைத்துவிடுவாள் என்ற காரணத்தால் அவளிடமே விட்டுவந்த தாவர சங்கமச் சொத்து!

ஐந்தாறு மைல் வந்தது; பஸ்ஸை மறித்து அந்தப் பெண் இறங்கினாள். மறந்துவிட்டாளோ என்னவோ கொண்டுவந்த சூட்கேஸை எடுத்துப் போகவில்லை! டிரைவரும் கவனிக்கவில்லை. கண்டக்டர் யாரோ ஒரு கிழவரிடம 'யோக்கியத்தனமாகப்' பேசிக்கொண்டிருந்தான்.

அவள் விட்டுப் போன அந்தச் சூட்கேஸுக்கு அந்தப் பஸ்ஸில் உரிமையானவன் கோபாலன். உண்மையில் அது அவனுடைய சொத்துத்தானே

தான் இறங்கவேண்டிய இடம் வந்ததும் கோபாலன் பஸ்ஸை மறித்தான். எழுந்து சூட்கேஸை எடுக்கப் போனான். என்ன ஆச்சரியம்! 'சட்டப்படி' அவனுக்குச் சொந்தமான அந்தப் பொருளுக்கு இன்னொருவன் உரிமை கொண்டாடினான்.

"என்ன தம்பி! கண் தெரியலைப் போலிருக்கு—வேறெங்காவது வைத்திருப்பே வடிவாய்ப் பாரு!' என்று மீசையில் கை போட்டான் அந்த ஆசாமி

"போய்யா! பகிடியா பண்றே" என்றான் கோபாலன்.

"ஏண்டா, எங்காவது திருடப்போவதுதானே—என் பெட்டியிலே ஏன் கையைப்போடறே!" என்று இந்தச் சாக்கடைச் சமுதாயம், ஒரு 'ரௌடி' யாக உருவாக்கிவிட்ட அந்த ஆசாமி உறுமினான்.

அரசியல்—சினிமா—இலக்கியம்போன்ற சர்வ உலகிலும் சஞ்சரித்தவர்கள் இப்போதுதான் திரும்பினார்கள். ஆனால் அவர்களுக்கு அதைத் தீர்த்துவைக்கவழியேது?

ஒருவன் ரௌடி-மற்றவன் படித்தாலும், அந்தக் கலை தேய்ந்தவன்.

"பையனுடையது போலே இருக்கு" என்றார் ஒருவர்.

"ஏன்-எழுதியிருக்கோ?" என்றார் மற்றவர்.

"அதைக் கேளு! மற்றவன் அட்டடி ஒண்ணு வைச்சிக்கப்படாதோ" என்றார் மூன்றுவர்.

இவர்களின் விசாரணை இப்படி இருக்க, அந்த இருவருமே காரசாரமாகப் பேசிக்கொண்டார்கள். யாராவது ரௌடி என்றால் கோபாலனுக்குப் பயம் தான்! என்றாலும் இந்த விஷயத்தில் அவன் துணிந்து நின்றான்.

டிரைவர் பாடு சங்கடமாய்ப்போய்விட்டது அவர்களின் வார்த்தை தடிப்பேறி—கைகால் துடிப்பதற்கிடையில நல்லவேளையாக, ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து சேர்ந்தார் அந்த சூட்கேஸையும் அதற்கு உரிமை கொண்டாடும் இருவரையும் ஜீப்பில் போட்டுக்கொண்டு பறந்தார்

* * *

"உன் பெட்டியிலே என்ன வைச்சிருக்கே—" இது இன்ஸ்பெக்டர்.

"இரண்டு சாரம், மூன்று சட்டை, ஒரு மணிபர்ஸ்—இது அந்த ஆசாமி.

"நீ சொல்!' என்று கோபாலனுக்குக் கட்டளை பிறந்தது. அவன் சற்றுத் தயங்கினான். உடனேயே.

'எல்லாதையும் சொல்ல வேண்டாம் ஸார்! உள் பெட்டியிலே என் பெயர் இருக்கு வி. கே. கோபாலன்' என்றான்.

"சாவியைக்கொடு"

இந்தக் கேள்விக்கு இருவருமே பதில் சொல்லவில்லை. ஒருவரையொருவர் பார்த்து முழித்தார்கள்.

"திருட்டு ராஸ்கல்கள்! சாவி இல்லே-பெட்டியைக் கொண்டுவந்துட்டான்கள்—அதற்கு உரிமை வேறே-" என்று உறுமிக்கொண்டே, ஒரு கான்ஸ்டபிளைக் கூப்பிட்டு, அதை உடைக்கும்படி கட்டளையிட்டார்

பெட்டியின் பூட்டு உடைக்கப்பட்டது. எல்லோரும் கவனமாக அதைப் பார்ப்பதற்கு தயாராயிருந்தனர் ரௌடிக்குப் பயம்! மனம் 'திக் திக்' என்றது. கோபாலனுக்கு ஒரு அசட்டுத் துணிவு-பெட்டி எப்படியோ அவனுடையதுதானே!

கான்ஸ்டபிள் பெட்டியைத் திறந்தான் என்ன ஆச்சரியம்! என்ன துணிச்சல்!

அதற்குள்ளே, கழுத்தை நெரித்து முறிக்கப்பட்ட ஒரு பச்சிளம் குழந்தை! அதன் மூக்கிலிருந்து புது ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. இன்ஸ்பெக்டர் 'குழந்தையைப் பார்க்கவில்லை-பெட்டியின் உள் பக்கத்தைப் பார்த்தார்; வாசித்தார்

"வி கே கோபாலன்"

கண்களிலே கோபக் கனல் பறக்க கோபாலன் பக்கம் திரும்பினார் இன்ஸ்பெக்டர் அவன் கண்களிலே கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது—! அது கண்ணீரல்ல; எதிர்காலத்தையிட்டு அவன் தன் இதயப் படுதாவில் தீட்டிய கனவுச் சித்திரங்களைக் கரைத்துவிட்டு வருகிற காட்டாற்று வெள்ளம்!

'உண்மையைச் சொல்; நீதானே கோபாலன்?" இன்ஸ்பெக்டரின் கேள்வியிலே பச்சாத்தாபம் தொனித்தது.

"ஆம்!' என்றான் கோபாலன். பதிலிலே வயிரம் பாய்ந்துவிட்ட உறுதி தெரிந்தாலும் குரல் தழதழத்தது; தொண்டை அடைத்துக்கொண்டது தனியே தவிக்கவிட்டு வந்த பார்வதி அவன் நெஞ்சத்துள் புகுந்து அடைத்துக்கொண்டாளோ என்னவோ.........?

* * *

சிறைக் கம்பிகளுக்குள்ளே தள்ளப்பட்ட போது கோபாலன் அழவில்லை. இந்த உழுத்துப்போன சமுதாயத்திலே, 'சிறை வாழ்வுதான் சிறந்த வாழ்வு' என்ற உண்மையை உணர்ந்தவன்போல் ஞானி போலச் சிரித்தான்.

## இஸ்லாமிய உலகம்

(7ம் பக்கத் தொடர்ச்சி)
ஷம்சுத்தீன் அவர்கள் 'முஸ்லிம் மஞ்சரி' என்ற பெயரால் ஓர் மாத சஞ்சிகையை நடத்தப்போவதாகவும அது ஜனவரிமுதல் சென்னையிலிருந்து வெளிவருமெனறும் அதன் காரியாலயம கொழும்பிலிருக்குமென்றும் அறியப்படுகிறது.

### மஸ்கெலியாவில்

"வருடந்தோறும் "ஈதல் மீலாத் ஷரீபை' மாத்திரம் கொண்டாடிவிட்டால் போதாது. நமது அருமை நாயகம் (ஸல்) அவர்களின் நற்போதனைகளையும் நாம் ஒவ்வொருவரும் பின்பற்றி நடக்க முயல வேண்டும் குறிப்பாக ஒவ்வொரு முஸ்லிமும் ஐங்காலத் தொழுகையை விடாமல் தொடர்ச்சியாக தொழுதுவர வேண்டும்" என்று மஸ்கெலியா முஸ்லிம் முன்னேற்ற சங்க ஆதரவில் பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது பேசிய அதன் பிரதம பேச்சாளராகிய மவ்லானா மௌலவி கே. எம். செய்யது முஹம்மது ஆலீம் சாஹிப் ஹாஜில் ஹரமைனிஷ்ஷரீபைன் அதயல்லாஹு அகாமல்லாஹு ரகாஹு அஸ்ஸாகினு அவர்கள் எடுத்தியம்பினார்கள்

அதற்கு முன்பு கடந்த 12 நாட்களாக மவ்லவி ஜே. கே. அப்துல் ரஸாக் ஆலீம் சாகிப் அவர்களின் தலைமையின்கீழ் ஓதப்பட்டு வந்த "மவ்லூது" தமாம் ஆக்கப்பட்டது. மேற்படி கூட்டம் கடந்த 30-11-52 ஞாயிற்றுக்கிழமை மாலை 7-30 மணியளவில் துவங்கப்பட்டு ஈற்றில் "நேர்ச்சை" பரிமாறப்பட்ட பின் கூட்டம் இனிது கலைந்தது

## கேட்டுப்பாருங்கள்

குயுக்தி

★ ஆறெண்,
வெள்ளவத்தை.

கே: தபால் முத்திரைகளிலும் ரூபாய் நோட்டுக்களிலும் சிங்களவர்களின் சின்னங்களாகவே காணப்படுகின்றன தமிழர்களின் சின்னங்களுக்கு இடமில்லையா?

ப: அருமையான கேள்வி ஒத்துழைப்புத் தமிழர்களிடம் கேட்க வேண்டிய கேள்வியை குயுக்தியிடம் கேட்டுவிட்டீர். இந்த நாட்டில் தமிழர்களுக்கே இடமில்லை எனனும் படியாக சிங்கள வகுப்புவாதிகள் செயலாற்றிவரும் போது சின்னங்களுக்கு வேறு இடம் வேண்டுமா?

க. புவனசுந்தரம்,
பருத்தித்துறை.

கே: திரு ஜீ. ஜீ. பொன்னம்பலத்திற்கு உயர்தர நீதிமன்றத்து நீதியரசர் பதவி கொடுத்தால் அவர் என்ன செய்வார்?

ப: ஒரே வழக்கிற்கு இன்று ஒரு தீர்ப்பு எழுதுவார்; நாளை ஒரு தீர்ப்பு எழுதுவார்.

ஃ

எஸ். என். இராஜன்,
கோண்டாவில்.

கே: சதா தன் கால்களை ஆட்டிக்கொண்டிருக்கும் பெண்ணைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

ப: நாட்டியம் பயின்றால் நன்றாய் வரக்கூடியவள் என்று நினைக்கிறேன்.

ஃ

பீ. ஏ. ஹமீது,
வெள்ளைமணல்.

கே: கம்பரைக் கவிச் சக்கரவர்த்தியென்றார்களே இது சரியா?

ப: கம்ப ராமாயணத்தில் உள்ள கவிதைச் சுவையை உம்மால் அனுபவிக்கமுடியுமானால் கம்பர் கவிச் சக்கரவர்த்தியென்பதை நீரே ஒப்புக்கொள்வீர்.

ஃ

எஸ் எம். பி.
ஹமீட்லெப்பை, மாத்தளை.

கே: கம்யூனிஸம் என்றால் என்ன?

### பரிசு ரூ. 3-00

யாரும் கேள்விகள் அனுப்பலாம். ஆனால் கேள்விகள் போஸ்கார்ட்டில் மட்டுமே எழுதப்படவேண்டும். தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ரஸமுமான பதில் கிடைக்கக்கூடிய சிறந்தகேள்வியைஅனுப்புபவர்களுக்கு ரூ 3-00 பரிசு வழங்கப்படும்.

ப: ஏழைகளின் பகல் கனவு, அமெரிக்கர்களின் சிம்ம சொப்பனம்.

ஃ

வீ. பீதாம்பரம்,
சந்திவெளி

கே: குளிர்ந்த நாட்டில் வாழும் மக்கள் விரும்பும் பழம எது?

ப: கம்பளம்.

ஃ

ப. சுமதி, வண்ணார்பண்ணை.

கே: மனிதர் திரும்பத் திரும்பப் பிறக்கிறார்கள் என்பது உண்மையா?

ப; அது எனக்குத் தெரியாது: ஆனால் கோழைகள் திரும்பத் திரும்ப பல தடவைகள் இறக்கிறார்கள்.

ஃ

கூற்றன், கழுத்துறை.

கே: திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு வி குமாரசாமி, திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் தமிழினத்திற்கும் என்ன தொடர்பு?

ப: சீனாவிலிருந்து அரிசி கொண்டுவந்தேனும் ஒரு புதிய தமிழினத்தைப் படைக்கப் பார்ப்பவர் திரு குமாரசாமி. தமிழரசை ஸ்தாபித்து தமிழினததைக் காக்கப் பார்ப்பவர் திரு செல்வநாயகம். ஆனால் திரு பொன்னம்பலமோ ஒரு மந்திரிப் பதவிக்காக யு. என். பியோடு கையுயர்த்தி தமிழினத்தை அழித்துவரும் ருத்திரர்.

ஃ

எஸ். கணேஸ்,
திருகோணமலை.

கே: ஒரு பெண்ணை மூன்றுபேர் காதலித்தால் அந்தப் பெண் யாரைக் காதலிப்பாள்.

ப: ஒரு நாலாவது பேர் வழியை.

ஃ

ஈ. எஸ் இலஞ்சியம்,
மடுல்கெல

கே: உலகத்தை வெறுப்பவர் யார்? உலகத்தை வளர்ப்பவர் யார்?

ப: உலகத்தை வெறுப்பவன் சோம்பேறி உலகத்தை வளர்ப்பவன் விவசாயி.

ஃ

எஸ் கே. சுப்பையா,
அப்கொட்.

கே: வௌவால் எந்த இனத்தைச் சேர்ந்தது?

ப: சுயேச்சையாகப் போட்டியிட்டு யு. என். பியில் சேரும் எம். பீக்களின் இனத்தைச் சேர்ந்தது.

ஃ

க. கணபதிப்பிள்ளை,
நல்லூர்.

கே: விக்கல் என்றால் என்ன?

ப: மனைவியின் அபிப்பிராயத்திலிருந்து கணவன்மாறுபட்டால மனைவியைப் பீடிக்கும் ஒருவித நோய். சில சமயம் இது கண்களையும் கசியச் செய்யும்.

ஃ

த. நடராசா, குப்பிளான்.

கே: ஒரு பெண்ணின் கண் அம்புக்கும் வேடனின் வில்லம்புக்கும் வித்தியாசம் என்ன?

ப: வில்லம்பு பட்டால் உயிர் உடனேபோய்விடும். கணணம்பு பட்டால் உயிர் அணுவணுவாகத்தான் போய்க்கழியும்.

ஃ

எஸ். கே ராம்மய்யா,
நாகசேனை.

கே: கடவுளின் நிறம் என்ன?

ப: கடவுள் என்ற பதத்தைப் போட்டு திராவிட கழகத்தினர் வெளுத்து வாங்குவதைப் பார்த்தால் அவர் இந்நேரம் சாயம் போய் இருப்பார் என்று தோன்றுகிறது.

ஃ

கா. சுந்தரமூர்த்தி,
அக்கரைப்பற்று.

கே: சுத்தானந்த பாரதியாரைக் கூழுக்குப் பாடும் கவிஞர் என்று ஏளனம் செய்தீரே அது சரியா?

ப: சுத்தானந்தரை நான் ஏளனஞ் செய்யவில்லை ஐயா, ஔவைக் கிழவியின் அந்தஸ்தில் வைத்துப் பாராட்டினேன்; அவ்வளவுதான்.

★ இவ்வாரம் ரூபா 3-00 பரிசு பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலீஸ் காரிகள் மீது

(2-ம் பக்கத் தொடர்ச்சி) நடவடிக்கையாகும் என்று அந்த தர்க்கவாதி சண்டப் பிரசண்டமாக வாதிக்கிறார்.

**நாடு கடத்துதல்**

நமது அரசாங்கம் "நாடு கடத்துகிறோம்" என்று தப்பட்டமடித்துக் கொண்டு இந்தியர்களை தேசப்பிரஷ்டம் செய்வதில்லை. ஆகவே அவர்களை நாடு கடத்துகிறோம் என்று கூறாமல் யு. என். பி ராஜதந்திர முறைப்படி "தரிசனத் திர்சாக" அனுப்புகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவற்றை திருப்ப ஏற்றுக்கொள்ள அரசாங்கம் மறுக்கலாம் என்றெல்லாம் பிரஸ்தாப பிரகஸ்பதி அபிடீராயப்படுகிறார்.

மேலும் புத்தமதம்கூட இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டதால் அதுவும் நாடு கடத்தப்படலாம் என்றும் அவர் அச்சம் தெரிவிக்கிறார்.

—முகரா


## தானே இயங்கும் கைத்துப்பாக்கிகள்

**லைசன்ஸ் கிடையாது**

முதலில் பாதுகாப்பு




6 வெடி கைத் துப்பாக்கி

நாடகத்திற்கும், சினிமாவிற்கும், அபாய காலத்தில் திருடர் பயத்திற்கும் மிக உபயோகமானது வெடி தீர்க்கும் போது புகையையும், நெருப்பையும் கக்குகிறது.

உண்மை கைத் துப்பாக்கியைப் போல் தோற்றமளிப்பது.

ஒரு டஜன் இனம் தோட்டாக்களுடன் விலை ரூபா 8-00. விசேஷ செய்வினையான டீலக்ஸ் 666ம் நம்பர் விலை ரூபா 10-00. பார்சல் தபால் செலவு ரூபா 1-2-0.

வேறு: ஒவ்வொரு ஆர்டருக்கும் ஒரு புட்டி ரிவால்வர் எண்ணெய் இனாம்.

திருப்தியில்லாவிட்டால் பணம் வாபஸ்.


கிடைக்குமிடம்:


MESSERS AMERICAN TRADING COMPANY,
(S. T. C.) Jullundur City (INDIA,



## தொழில் ஸ்தாபனங்கட்கு தேவையான ஸ்ரோர் சாமான்கள்

தோட்டக் கருவிகள்
ஆயுதங்கள்
பம்ப் வகைகள்
கட்டிட சாமான்கள்
சீமெண்ட் யந்திரங்கள்
இரும்பு சாமான் வகைகள்
கரத்தைப் பூண்கள்
கரத்தைப் பட்டங்கள்
திருக்கல் கரத்தை அச்சுகள்
புறுசுகள்
தீந்தை வகைகள்



### வேலை ஸ்தலம்

செப்பு இரும்பு வார்ப்புகள்
யந்திரங்கள் பழுதுபார்த்தல்
தண்ணீர் பைப்லைன் வேலைகள்
இரும்புகேடர் வேலைகள்

729

உங்கள் பொருள்கள் சகாயமான விலைக்கும், வேலைகள் தேவைக்கேற்றவாறு குறைந்த விகிதத்திற்கும், தாமதமின்றி முடித்துக்கொடுக்கப்படும்.

**உங்கள் தேவையை அறியுங்கள்**

## சாமுவேல் சன்ஸ் அன் கொம்பெனி லிமிரெட்

கொழும்பு 12 தபால் பெட்டி: 46

கிளைக் கந்தோர்;

ஆஸ்பத்திரி ரேட், யாழ்ப்பாணம்


# கருத்து......

[3-ம் பக்கத் தொடர்ச்சி] யும் கவியோகி பாரதியைக் கௌரவிக்கின்றது ஈழத்து அன்பரும் அடிகளாரை அஞ்சலி செய்கின்றனர். இவற்றைக்கண்டு சகிக்கொணாப் புலவர் மணி அவர்கள் "மணிப்பட்டம் வேண்டாம்", "கொடுப்பவர் யாவர் வாங்குபவர் யாவர்? எனவும் "மரபறியாச் செய்கையிற் புகுதல் தமிழ்த் தாய்க்கு இழிவை உண்டாக்குமன்றோ" எனவும் வாய் வேதாந்தம் பேசுவது, ஈழத்துக்கே அவமானம், இனிய தமிழ் மொழிக்கே அவமானம், இந்நாட்டுத் தமிழருக்கே அவமானம் இன்னும் பட்டத்தை ஏற்ற திருவாளர்கள் கணேசையர், நவநீதகிருஷ்ண பாரதி, பெரியதம்பி, ந. சுப்பையா அவர்களுக்கும் யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துக்கும் அவமானம். இதனைப் புலவர் உணருவார்களா?

கவியோகி அவர்களைப் பாவலன் என்று கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை கூறுகிறார், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் கூறுகின்றார். தமிழ்ப் பெரியார் திரு கலியாணசுந்தரர் கூறுகின்றார். தமிழ் நாட்டுக் கவிஞர்கள் அத்தனை பேருமே கூறுகிறார்கள் என்றால் மிகையாகாது. இத்தகைய தமிழ் முனியை, இழிவுபடுத்திக் கூறியது முற்றிலும் தவறு.

பழந்தமிழ் இலக்கண வரம்புகட்குக் கட்டுப்பட்டு பாடும் பாவினில் வல்லுநரான எமது சோமசுந்தரப் புலவரின் புலமையை ஈழம் போற்றுகின்றது. ஆனால் பிறர்மீது பொறுமைப்படுதலை விரும்பவில்லை. பல மொழிகளிலே பாண்டித்தியம் பெற்று, பிற நாட்டு நல்லறிஞர் சாஸ்திரத்தை தமிழ் மொழியில் ஆக்கும் இயல்பற்ற ஸ்ரீ சோமசுந்தரப் புலவர் அவர்கள் சமரசம் நாட்டிச் சகோதரத்துவம் வளர்த்து, தமிழ் மொழியைப் போற்றித் தாய் நாட்டிற்குத் தனிப் பெருமை தேடிய தவயோகியைக் குறைகூறுவதனால் ஈழத்துப் புலவர் இழிவடைகின்றார் என்பதற்காக மிகவும் இரங்குகின்றேன்.

நடராசா தர்மலிங்கம்
இராமக்கிருஷ்ண சங்க வித்தியாலயம்
அக்கரைப்பற்று
5-12-52.

**மாகாலை பணிய கணக்கு**

மாகாலை பணிய கணக்கு வருடாந்த தேர்தல் கூட்டம் ஜில்லா பிரதிநிதி திரு எம். எஸ். ஆரோக்கியநாதன் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் கீழ்கண்டவர்களை நடப்பு வருட தோட்டக் கமிட்டி உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டது.

தலைவர்: ராமலிங்கம், காரியதரிசிகள்: தேசவன், ... பொக்கிஷதார்: இட... கங்காணி




# பிரபல சினிமா நடிகரின் லட்சியம்

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான ஆசை இருந்துகொண்டேயிருக்கும் ஆனால் அவர்கள் வாழ்க்கையின் லட்சியத்திற்கும், செய்யும் தொழிலுக்கும் சம்பந்தமே இருக்காது. இதற்கு ஜோன் மெக்ரேயின வாழ்க்கையை உதாரணமாகச் சொல்லலாம்.

அவர் பிரபல சினிமா நடிகர். நடிப்பின் மூலம் அவர் வாழ்க்கை நடத்தப் போதுமான பணம் கிடைக்கிறது. அப்படியிருந்தும் அவருக்கு சினிமாவில் நடிப்பதைவிட கிராம வேலைகளைச் செய்வதில்தான் அதிக நாட்டம் இருந்துவருகிறது. அவர் சினிமாவில் நடிக்க வந்ததற்குக்கூட அதே ஆவலேதான காரணம் என்றும் சொல்லலாம். ஜோங்கின் பெற்றோர்கள் கிராமப் புறத்தைச் சேர்ந்தவர்கள். விவசாயம் செய்துவந்தவர்கள் ஜோங் சிறுவனாக இருக்கும் சமயம் விவசாய வேலையில் அதிகமாக கவனம் செலுத்திவந்தார் ஆனால் அவருடைய பெற்றோர் அவர் நன்கு படித்து உத்தியோகத்திற்குப் போகவேண்டும் என்று விரும்பினர்.

ஜோங் குடும்பத்தாருக்குச் சொந்தமாக விவசாய நிலம் இல்லை இதனால் ஜோங் தனக்கு சொந்தமாக நிலமில்லாமல் விவசாய வேலைசெய்ய இஷ்டப்படவில்லை. அவர் எப்பாடுபட்டாகிலும் தமக்குச் சொந்தமாக நிலம் வாங்க வேண்டும் என்று கருதினர். அவருக்குச் சுலபமாகவும் விரைவிலும் தம் ஆவலைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு ஏற்றதாகவும், பணம் சம்பாதிக்கத் தெரிந்த ஓரே வழி சினிமாவில் நடிப்பதுதான். அதே எண்ணத்தில்தான் அவர் சினிமாவில் நடிக்க முற்பட்டார். சினிமாவில் நடிக்க முற்பட்ட சமயத்திலேயே அவருக்கு பிரான்ஸெஸ்டி என்ற நடிகையின் நட்பு ஏற்பட்டது. இருவரும் 1933ம் வருஷம் கலியாணம் செய்துகொண்டனர். அதே சமயம் கலிபோர்னியாவில் சாந்தா மோல் வேலி என்ற பகுதியில் ஜோங் மனதிற்குப் பிடித்தமான ஆயிரம் ஏக்ரா நிலம் கிடைத்தது. அதை உடனே வாங்கிக் கொண்டார்.

ஜோங் தம்பதிகளுக்கு இப்பொழுது இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களுக்கும் தம் பெற்றோரைப் போலவே விவசாயத்திலும், கிராமவாசத்திலுமே அதிக பற்று இருந்துவருகிறது. சமீபத்தில் ஜோங் தம்பதிகள் மனதை மாற்றிப்பார்க்கலாம என்று நகரப் பகுதிக்கு தம் குடும்பத்தை மாற்றினர்: ஆனல் அவர் நினைத்தபடி பலன் கிடைக்கவில்லை. வந்த சில நாட்களுக்குள்ளாகவே திரும்பவும் கிராமத்திற்கே போகவேண்டியதாயிற்று.

ஜோங்கிற்குச் சிறுபிராயமுதலே குழந்தைகள் என்றால் ஆசை. அவர் ஒரு படத்தில் ஷேர்லி டெம்பிள் என்ற சிறுமி நடிகைக்குத் தகப்பனாக நடித்தார். அதன்மூலம் அவருக்குத் தகப்பனுக்கு என்னென்ன பொறுப்பு என்பதை நன்கு தெரிந்துகொண்டார். ஜோங் தம்பதிகள் சினிமாவில் நடித்தாலும் தம் குடும்ப வேலைகளைத் தாங்களே செய்கிறார்கள். படங்களில் நடிப்பதிலிருந்து ஓய்வு கிடைக்கும் சமயம் கிராமத்திற்குச் சென்று விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். சினிமாவில் நடிப்பதில் அவர்களுக்கு எவ்வளவு ஆர்வம் இருக்கிறதோ அதைவிடப் பன்மடங்கு அதிகமாக தம் குழந்தைகளைப் பராமரிப்பதிலும், கிராம வேலைகளிலும இருக்கிறது.




ராஜ்கபூரும் (இடதுபுறம்) நர்கீஸும் ஹாலிவுட்டுக்குப் போகும் வழியில் லண்டனுக்கு விஜயம் செய்தார்கள். அவர்களை பி. பி. ஸியில் பேசும்படி ரேடியோ அதிகாரி கேட்டுக்கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

உழைக்கின்றனர் இவ்வகைத் தொழிலாளர்களை நாடு கடத்தி விட்டால் விளை நிலங்களில் வேலை செய்ய ஆள் கிடையாது போகும். போகவே கிளிநொச்சி பரந்தன் முதலான இடங்களில் கமத் தொழில் சீணித்துவிடும் இதனால் பஞ்சமும் பசியும் யாழ்ப்பாணத்தை வரை எதிர்நோக்கி நிற்கின்றனவென்பது நிச்சயம். தீர்க்கதிருஷ்டியுள்ள பலர் "இந்திய தொழிலாளர்களை நாடுகடத்துவதால் வருங் காலத்தில் கிளிநொச்சி பரந்தன் முதலாமிடங்களில் வேலை செய்ய ஆள் கிடையாமற்போகவே வயல் நிலங்களெல்லாம் காடு மண்டி அந்நிலங்கள் சல்லிசான விலைக்கு நிச்சயம் விற்கப்படப் போகின்றன" என்று சொல்லி வருவதைக்கூட நான் கேட்டிருக்கிறேன்.

## நிஜப் புயல்

இதென்ன இழவு! நாட்டு அரசியல் புயலிலகப்பட்டு நிலைதடுமாறி. நிசப் புயலைப் பற்றி எழுதாது வெகு தூரம் அடித்துக்கொண்டு போகப்பட்டுவிட்டேன் போலிருக்கின்றது. ஆகையினாலே இனி நிசப் புயலைப் பற்றி எழுதப் போகின்றேன் இராவணன் இலங்கையை ஆண்ட காலத்தில் சந்திரசூரியர்கள் இராவணேஸ்வரனுக்குப் பயந்து இலங்கையின் மேலாகச் செல்லாது மதிலைச் சுற்றிச் சுற்றி அதாவது நாய்கோடியைச் சுற்றிச் சுற்றி வருவதுபோலவேதான் கொண்டிருந்தனவாம் வாயு பகவான் கூட நாட்டுள் வரப் பயந்து வெளிச்சுப் பறத்தால் வீசிக் கொண்டு திரிந்தானாம். அந்த இலங்கையை ஆளும் எங்கள் மந்திரி சபையினர் சின்னப்பட்டவர்களா? சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு. பிரிவிக் கவுன்சில் தீர்ப்பு இவைகளையெல்லாம் மீறிய வீராதி வீரர்களல்லவா? இராவணன் காலத்தில் வேலிக்குப் பின்னால் வீசித் திரிந்த அந்தப் பயங்கொள்ளி வாயு பகவான் எங்கள் மந்திரி சபையினரைத் துச்சமாய் மதித்து அவர்கள் வைத்த சட்டத்தை மீறத் துணிவு கொண்டுவிட்டானே! இது காலத்தின் கூத்தல்லாமல் வேறென்ன? பனை மரங்களைச் சர்க்கார் அனுமதியின்றி யாரும் வெட்டக் கூடாதென்பது கண்டிப்பான சட்டம்? இந்தப் புயலுக்கு எங்கள் சர்க்கார் சட்டத்தை மீற என்ன துணிச்சல் வந்ததோ தெரியாது. அது அடித்துக் கொட்டிய, முறித்து வீழ்த்திய பனை மரங்களுக்குக் கணக்கேயில்லை. நல்லவேளை! இது பழங் கதைகளுக் காலமல்ல அப்படியிருந்தால் அது நொறுக்கிய மூட்டிகளின் தணைகையும் இதோடு சேர்க்க வேண்டி வந்திருக்கும்.

டணக்காரன் ஒருவன் சாகப் போகும் தறுவாயிலே அவன் பெண்டு பிள்ளைகளும் பந்தக்களும் அவன் கிட்டப்போய் "நீதான் போனாப் போகிறாய்: எனக்கு என்னை வைத்துவிட்டுப் போகிறாய்? எனக்கு என்ன வைத்துவிட்டுப் போகிறாய்?" என்று தங்கள் சொந்த லாபத்துக்காக அவனை இடிக்கத் தொடங்கிவிட்டார்களாம். இதேபோல நீர்வேலி, ஏழாலை, நாவற்குழி, கோப்பாய் முதலாமிடங்களிலுள்ளவர்களெல்லாரும் மருந்துக்குக் கூட ஒரு வாழைச் செடியைத் தானும் விடாது புயல் முழுக்க முழுக்க அடித்து முறித்து துவைத்துஎறிந்துவிட்டிருப்பதைக் கண்டு "ஐயோ எங்கள் வாழ்வு போச்சே! இனி உய்யத்தான் வழி ஏது?" என்று கண்ணீர் விட்டுக்கொண்டிருக்க, சில போஜனப்பிரியர்களோ, "ஐயோ! தைப் பொங்கலுக்கு நாங்கள் வாழைப் பழத்துக்கு எங்கேபோவது?" என்று பிரலாபிப்பதைப் பார்க்கும் போது நமக்குச் சிரிப்புதான் வருகின்றது. தைப் பொங்கற்காரர் ஒருபுறம் இப்படியழ, சோற்றுக் கடைக்காரரோ "இனி வாழை இலைக்கு நாங்கள் என்ன பண்ணுவது? நூறு ஐந்நூறு ரூபாவரையிற் போகுமே" என்று மறுபுறம் ஒப்பாரி வைக்கின்றனர்.

## ஹலோ......... மைடியர்

புயலால் கரையோரப்பகுதிகளிற் குடியிருந்தவர்கள் மாத்திரமல்ல உள் நாட்டிலிருந்தவர்கள் பலர் கூட வீடு வாசல்களை இழந்தும் கன்று காலிகளைச் சாகக் கொடுத்தும் தவிப்பதைக் காணச் சகிக்கவில்லை.

"ஹலோ......... கப்பல் வராதபடியால் வெங்காயம் சூடேறும் போலிருக்கே!" 'ஹலோ............ கிறிஸ்மஸுக்கு 1703 விலை ஏறுவது நிசந்தானே! அப்படியானால் 100 பீஸ் வரையிலிருக்கின்றது பதுக்கிவைக்கட்டுமா?" என்ற வகையாக வடபகுதியிலிருந்து கொண்டு கொழும்பிலுள்ள பழம் பெருச்சாளிகளோடு டெலிபோனிற் பேசும் கள்ளமார்க்கெட்டுக் காரரும். "ஹலோ ...... டார்லிங்! கிறிஸ்மஸுக்கு எப்போது லீவு? கொஞ்சம் முந்தி லீவு எடுத்துண்டு வரமாட்டீங்களா? நீங்களில்லாமல் எனக்கு என்னவோபோலிருக்கு" என்றவகையாகத் தங்கள் காதலரோடு குலாவும் இளஞ் சோடிகளும், தந்திமரங்களை முறித்தெறிந்து தந்தி டெலிபோன் போக்குவரத்துக்களைத் தடைசெய்து பெரும் வம்பு வேலையை இந்தப் புயல் செய்துவிட்டபடியினாலே அவர்கள் அன்று பகல் பூராவும் முகஞ் சுண்டிக் குரங்குகள்போல் டெலிபோன்களருகிற் குந்தியிருந்த கண்றாவியையும் பார்க்கவேண்டுமே!

என்ன இருந்தாலும் எவ்வளவு சேதத்தைக்தான் இந்தச் சண்டமாருதம் விளைவித்து விட்டாலும் நான் அதை மெச்சத்தான் செய்கின்றேன் யாழ்ப்பாணத்து எம்பீக்களில் ஒரு வழக்கமுண்டு தெரிவு காலங்களில் வீட்டுக்கு வீடு போவார்கள் என்னவோ எல்லாம் செய்வோம் என்று புளுகிக் கொட்டுவார்கள். பின் எம்பீக்களாகிவிட்டார்களோ அப்புறம் கொழும்புக்குப்போய் மாடிவீடுகளில் மெத்தைபோட்ட ஸோபாக்களிற் குந்திக் கொண்டு விடுவார்கள். பின் அடுத்த தெரிவுகாலம் வரையும் அவர்கள் தங்களை எம்பீக்கள் என்ற உயர்ந்த பதவிக்கு ஆக்கிவைத்த பொது மக்களிருக்கின்றார்களோ அவர்கள் என்ன வானார்கள் என்று கொஞ்சங்கூட நினைப்பதில்லை இப்படிப்பட்ட எம் பீக்களையெல்லாம் இம்முறையடித்த சண்டமாருதம் யாழ்ப்பாணத்துக்கு ஓடிவரச் செய்திருக்கின்றது. வரும்போது அவர்கள் சும்மாவரவில்லை. மந்திரிமார் சிலரையுங்கூட அழைத்து வந்து சேதத்துக்குள்ளான பகுதிகளைச் சுற்றிப் பார்க்கவுஞ் செய்தார்கள். எங்கள் எம்பீக்களை இவ்வளவு தூரம் இறங்கிவரச் செய்த சண்டமாருதத்தை மெச்சுவதில் ஏதும் பிழையுண்டா?


# முருகன் தியேட்டர் (இந்துப்பிட்டி)

## சலனப்பட சரித்திரத்தில் ஓர் புதுமைச் சித்திரம்



சனி, ஞாயிறு பிற்பகல் 3 மணி, மாலை 6 மணி
இரவு 9-30 மணி-ஞாயிறு காலை 10 மணிக்கு விசேஷ காட்சி.
தினசரி மாலை 6-30 மணி இரவு 9-30 மணி

பயமறியாப் பாலனாக—தொல்லை தரும் பிள்ளையாக விளங்கினான் அமர். தந்தையின் பணக் காதலையும் அந்தஸ்து மோகத்தையும் பகைத்தார்.

ஷம்பயோ நடன சிங்காரி மயிலிடைக்காரி. ஒயில் நடை அழகி. கண்வலை வீசினாள். காதற் சுவையூட்டினாள்.

ஆனால் அந்நறுமணத்தை—அதன் ஒப்பற்ற சுவையை உணர்ந்தானில்லை அவன். பிறகு............?

## வெள்ளித் திரையே சாக்ஷி

நஸீர்கான்-ஷியாமா-அன்வார்
அச்சலா-ஷியாம்லால்-லலிதாபவர்
முதலியோர் நடித்த

ஹிந்திக் கதைதான்.....

# ஆஸ்மான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலைக்காட்சி

நாற்புறமும் திரை அலையையுடைய திரைகடலாய் சூழப்பட்ட பரந்த உலகின் கண் வாழும் மாந்தர்கள் யாவரையும் அருணன் தன் ஒளியுடன் கூடிய பொற்கிரணங்களுடன் கிழக்கு நின்று பிரயாணமாகி மக்களின் நாளாந்த வாழ்க்கையின் இன்ப நேரங்களைக் கண்டு பரவசம் அடைந்து மேற்கு வாயிலை அடைவான்.

அப்படி சூரியன் அடிவானத்தில் தன் அலங்காரத்துடன் பார் உலகில் உள்ள மக்களை குதூகலிக்க வைப்பதற்கு தோன்றும் நேரமே. மக்களின் ஆரவாரமும், ஆட்டமும். பாட்டங்களும் ரமணியமாகக் காட்சி அளிக்கும் அந் நன் நேரமே காலைக் காட்சிக்கு ஏற்ற தருணமாகும்.

இந்நேரத்தில் வெய்யோனினது பஞ்சவர்ணங்களையுடைய கதிர்களைப் பரப்பி ஏழு குதிரைகளின்மீது பவனிவரத் தயாராகும் பொழுது பறவை வர்க்கத்தினைச் சேர்ந்த சேவல் சூரியனுடைய அழகைக்கண்டு தாங்கொணுப் பரவசம்கொண்டு இதுவே மக்களை எழுப்பி இவ்வரிய காட்சியைக் காண்பிக்க நல்வேளையாகும் என்று நினைத்து தன்னுடைய கூவும் தொழிலை ஆரம்பிக்கும்.

ஆகவே இவ்வரிய கண்கொளாக் காட்சியைக் கண்டு களித்து மனம் பூரித்து செங்கதிரோன் தன் நன்றியறிதலை தெரிவிப்பதற்காக பிரகாசமுடைய ஒளியை அளித்து மக்கள் மனம் அந்நாள் முழுதும் ஏகசந்தோஷமாக இருக்கும்படி தன்னுடைய ஒளியை நன்கு பிரகாசிக்கும்படி செய்தவிட்டு மேலும் தன் குதிரையில் அடிவானத்தைப் பிடியாது மேலும் தன் பிரயாணத்தைத் தொடர்ந்து மேற்கே நோக்கி மறைவான்.

கா. ஜெயலெட்சுமி
அர்ச் மரியம்மாள் பாடசாலை
திருகோணமலை

## இலவமலரும் தீயும்

ஒரு காட்டில் ஓர் இலவமரம் மிகவுயர்ந்து வளர்ந்திருந்தது. இலவமரத்தின் மலர் சிவப்பு. திடீரென்று பார்த்தால் அம்மலர் தீப்போலிருக்கும். இம்மரம் முழுவதும் மலர்ந்து விளங்கிற்று இதனை அக்காட்டிலிருந்த குரங்குகள் கண்டன அந்தோ இம்மரத்தில் கொள்ளிக் கட்டைகள் எங்கிருந்தோவந்து தொங்குகின்றனவே இவைகளை இப்படியே விட்டுவிட்டால் இவை காடு முழுவதும் சுட்டெரித்து விடுமே, இவைகளை எப்படியாவது அவித்துக் காட்டுக்கு ஏற்படவிருக்கும் தீங்கைத் தவிர்க்க வேண்டுமென்று அவை முடிவு செய்தன. பக்கத்திலே மூங்கில் மரங்களும் மிகுதியாக வளர்ந்திருந்தன. அவற்றிலே பசிய தழைகள் அடர்த்தியாகத் தழைத்திருந்தன குரங்குகள ஒவ்வொன்றும் ஒவ்வொரு கொம்பை ஒடித்துக்கொண்டனவாய் இலவமரத்தின் மலருக்குச் சற்று தூரமாகவே நின்றுகொண்டு அம்மலரையடித்துத் தாம் தீயென்று கருதியவற்றை தொலைப்பதற்கு முயன்றன இக்காட்சி காண்போருக்கு மிகப் பேருவகையைத் தந்தது. செந்தமிழ்ப் புலவராகிய நக்கீரதேவர் இக்காட்டிற்கு வாதபோது இக்காட்சியை தாம்கண்டு வியந்ததன்றி நாட்டு மக்களுக்கும் எடுத்துக் கூறி அனைவரும் மகிழுமாறு செய்தார்

தேவாமைக்கல்
அறப்பொலக கல்லித்
தெபுவன பாடசாலை

## அடிக்குமேல் அடி!

(கல்வியூர் நடராசா)

இன்றைய இலங்கையிலே வாழப் பிறந்த தமிழர் சமுதாயம் வீழ்ந்து மடிகிறது. ஆளப் பிறந்த தமிழ்ப் பெருமக்கள் அடிமைப்படுத்தப்பட்டு அரசியல் அனுதைகளாக்கப்பட்டு அல்லோலகல்லோலப்படுத்தி நசுக்கப்படுகின்றனர். இதற்குத் தம்மைத்தாமே தலைவர்கள் என்று தம்பட்டமடித்துக் கொள்ளும் தமிழ்த் தலைவர்களிற் சிலர் தம் பட்டம் பதவிகளைப் பாதுகாப்பதற்காகத் தலையாட்டிப் பொம்மைகளாகக் கை காட்டி மரங்களாகத் தம் இனத்தையே அழிக்கவந்த கோடரிக்காம்புகளாக நின்று உதவி புரிகின்றனர் இதை இன்றைய அரசியல் விழிப்புற்ற வாலிப உலகம் பார்த்துத் தகுந்த சந்தர்ப்பத்தை நோக்கியவண்ணமே இருக்கின்றது. தமிழனின் தனிப் பெரும உரிமை, பெருமை பறிபோகின்றது. ஆனல் தமிழ்த் தலைவரிற் சிலர் தம் தலைப்பாகையை மாத்திரம் சரியாகப் பத்திரமாக இருக்கிறதா என்று மட்டும் பார்த்துக்கொள்ளுகின்றனர்.

இன்றைய அரசாங்கத்தின் நோக்கம் இலங்கை வாழ் தமிழ்ப்பெரும் இனத்தை அடக்கி ஒடுக்கி நசுக்கி அவர்களின் அரசியல் உரிமைகளைப் பிடுங்கி அவர்களின் வாக்குரிமை, பிரஜா உரிமைகளைப் பறித்து அவர்களை அரசியல் அனுதைகளாக்கி அழிக்கவேண்டுமென்பதே. இதற்கு ஆக வேண்டிய திட்டங்களைத் திரைமறைவில் சதியாலோசனை செய்து பாராளுமன்றத்தில் கொண்டுவந்து தம் கட்சிப் பலத்தைக்கொண்டு சட்டங்களாக்கி தன்மானத் தமிழினத்தை அவமானப் படுத்துகின்றனர்.

இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்குக் காரியஸ்தர்கள் யார்? புலி ஓடும் காட்டைத் திருத்தி பொன் கொழிக்கும் பூமியாக்கியவர் யார்? நாட்டின் முன்னேற்றத்திற்காக நெற்றியின் வெயர்வை நிலத்தில் சிந்த தம் இரத்தம் பிளிந்து உழைத்த உழைக்கும் வீரர் யார்? இந்திய தமிழ்ப் பெரும் பாட்டாளி மக்கள் அல்லவா? இதை யாரும் மறுக்கமுடியுமா? சிந்தியுங்கள்! இன்று அவர்களின் அவல-நிலையென்ன? வீரத் தமிழ் பேசும் நாட்டிலே சோர்வுப் பேச்சுக்கள். வெற்றிவேல் பிடித்த வீரத் தமிழ் கொடி உயர்த்தி வெற்றி வாகைசூடிய தமிழ் நாட்டிலே வெடடிக் கூச்சலகள்! அரசாங்கத்தின் சதியால்.

இலங்கையின் பொருளாதார சுபீட்சத்திற்காக அரும்பாடுபட்டு, அன்று நெடுமரங்கள் நிறைந்து அடர்ந்து வளர்ந்த பெருங் காட்டை பெருவிலங்கு நேரோடி வாழ்ந்திருந்த அப் பெருங்காட்டை, பருக்கைக் கல்லின் நெடுங்குன்றில் கொடிய விஷப் பாம்புக் கூட்டம் போராடிய பாழ் நிலத்தை அந்நாளில் புதுக்கியவர் யார்? பொன் கொழித்துப் பாலும் தேனும் பாய்ந்தோடும் புண்ணிய பூமியாக்கியவர் யார்? மலைநாட்டிலே சிற்றூர் நம் வரப்பெடுத்த வயலும், ஆறு தேக்கிய நல் வாய்க்கால்களும் வெட்டி உழுது உழுது நெல் விளைத்துப் பயன் விளைத்த பயன் விளைக்கும் வீரத் தோள்கள் எவரின் தோள்கள்? கற்பாறைகளைப் பிளந்து மலைகளை இடித்து மலைநாட்டைப் பதப்படுத்திப் பசளையிட்டு இன்று அரசாங்கத்திற்கு அதிக பணம் ஈட்டிக் கொடுக்கும் தேயிலைச் செடியைச் செழிப்புறச் செய்த கைகள் யார் கைகள்? தமிழர்களே! சிந்தியுங்கள்!! இரவு பகலாய் வெயிலிலும் மழையிலும் அற்ப ஊதியத்திற்காக உச்சி வெடிக்க உள்ளம் குழைய இலங்கையின் பொருளாதார சுபீட்சத்திற்காக (உழைக்கும்) உழைத்தவர்கள் யார்? இலங்கையைத் தாயகமாகக் கொண்ட இந்தியத் தமிழ்த் தொழிலாளிகள். அவர்களின் உழைப்புக்கு உபகாரமாக இலங்கை சர்க்கார் அடிக்குமேல் அடியாக, வாக்குரிமைச் சட்டம் பிரஜா உரிமைச் சட்டம் முதலியவற்றை அமுலுக்குக் கொண்டு வந்து அவர்களின் அடிப்படைச் சுய உரிமைகளுக்கு உலை வைத்தது அதிகார வெறியால் சென்ற கிழமை இலங்கை சர்க்கார் தம் உயர்தர நீதிமன்றம் அளித்த தீர்ப்பையே மீறி ஜனநாயகத்துக்கு முழுதும் முரணுக ஜனநாயகத்தின் அடிப்படை நீதிஸ்தலத்தின் தீர்ப்பையே முறியடித்து பிரஜாவுரிமைத் திருத்த மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றி, இலங்கை உலகின் இரண்டாவது தென்னுபிரிக்கா என்ற இடத்தைப் பெற்றதுமல்லாமல் இலங்கைவாழ் இந்தியத் தமிழ்ப் பெரும் இனத்தை உதைக்குமேல் உதையாக உதைத்திருக்கின்றது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொல்லுகின்றது போல........:

......பொழுதுதோறும்
புனலுக்கும் அனலுக்கும்
சேற்றினுக்கும்
கக்கும் விஷப்பாம்பினுக்
கும் பிலத்தினுக்கும்
கடும் பசிக்கும் இடை
யரு நோய்களுக்கும்
பலியாகிக் கால் கைகள்
உடல்கள் சிந்தும்
பச்சை இரத்தம் பரிமாறி
இந்த நாட்டைச்
சலியாத வருவாயும்
உடையதாகத்
தந்தவெதவர்? அவரெல்
லாம் இந்நேரம்
எலியாக முயலாக
இருக்கின்ருர்கள்!
ஏமாந்த நேரத்தில்
ஏற்றங்கொண்டோன்
புலி வேஷம் போடுகின்
ருன்! பொதுமக்கட்குப்
புலலளவு மதிப்பேனும்
தருகின்ருனு?

இன்றைய சர்க்கார் பொதுமக்களை அவமதித்து அநியாயமானதும், அக்கிரமமானதும் ஜனநாயகத்திற்கு முற்றும் முரணுனதுமான இச் செய்கைகளைச் செய்தல் மிகவும்வருந்தத்தக்கது!


கடலில் விழுந்து உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த ஒரு விமானியை ஹெலிகொப்டர் விமானமொன்று காப்பாற்றுகிறது.

## கல்வியின் பெருமை

கல்வியின் பெருமை சொல்லுக்கு அடங்காததாயிருக்கிறது; பிரகாசத்திற்கும், இருளுக்கும், புண்ணியத்துக்கும், பாவத்துக்கும் உள்ள வித்தியாசமே செல்வத்திற்கும் கல்விக்கும் உள்ளதாம். செல்வம் புத்தியை கெடுக்கும். கல்வி புத்தியை மேலும் மேலும்கொடுக்கும் கல்வியே தனம், கல்வியே தனம்பலமில்லார்க்கு கல்வியே பலம். கல்வியே பாக்கியம், கல்வியே பூஷணம், கல்வியே ஆபரணம் ஆபத்து வேளையிற் கல்வியே கவசம் நல்ல குலத்தில் பிறந்தும் ராசாவாகத்தான் இருந்தாலும் கல்வியறிவு இல்லாதவனை ஒருவரும் மதிக்க மாட்டார்கள். செல்வம் என்பதின் கருத்து செல்வோம். கல்வி என்பது கல்மேல் எழுத்து எப்படி அழியாமல் இருக்கிறதோ அதுபோல நாங்கள் அழையாது இருப்போம். கல்வியே ஜகத் பிரசித்தம். கல்வி அழகே அழகு. கல்வி நினைத்ததெல்லாம் தரும் சிந்தாமணி கல்வியே சுகம். கல்வி அழியாத ஆஸ்தியும் "சபை நடுவே நீட்டோலை வாசியா நின்ருன் மரம்" கல்வி அறிவு அற்றவன் மரமாகவே மதிக்கப்படுவார்கள் கல்வியின் பெருமை அளவிடற்கரிது

## மந்திரியின் புத்தி

ஒரு நாள் அரசனொருவன் மந்திரியுடன் உலாவிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் காலில் முள் ஒன்று தைத்துவிட்டது. எனவே இந்த உலகம் முழுவதிலும் தோலைப் பரப்பிவிடு என்று கட்டளையிட்டான் அரசன். உலகம் முழுவதும் தோலைப் பரப்புவதைவிட நம் கால்களை தோலினுல் மூடுவது இலேசான காரியமல்லவா? என்ருன் மந்திரி

அன்று முதல் அரசன் கால்களைத் தோலினுல் மூடிக்கொண்டான் மாணவர்களே மந்திரியின் புத்தியைப் பார்த்தீர்களா?

ச. தினகரப்பிள்ளை
சிவானந்தா வித்தியாலயம்
கல்லடி உப்போடை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

**சமூக வாலிபர் முன்னேற்றச் சங்கம்**

யாழ்ப்பாணம் சமூக வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் 7-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் 15-ம் வட்டாரப் பிரதிநிதி திரு ஏ. ஜே சுவாம்பிள்ளை எம். எம். சி தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது.

திருவாளர்கள்: கே. எஸ் கிருஷ்ணன், ஜி. நல்லையா எம் எம் சி, எச். எப் அரசரெட்டினம், எஸ். அந்தோனிப்பிள்ளை, பி ஐயம்பிள்ளை, அ. கணபதிநாதன், என் அருச்சுனராசா, எஸ் கணேசு, கே. நல்லதம்பி முதலியோர்கள் சொற்பொழிவாற்றினர்கள். மேற்படி சங்கத்தின் சார்பில் ஓர் வாசிகசாலையை திரு ஏ ஜே. சுவாம்பிள்ளை அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

**வானொலித் தமிழ்க்கலை மன்றம்**

இலங்கை வானொலித் தமிழ்க்கலை மன்றத்தின் நிர்வாகசபைக் கூட்டம் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் கடந்த 13-11-52-ல் கூடியபோது இசைக் கலைஞரைத் தரம் பிரிப்பதற்காக ரேடியோ சிலோன் சமீபத்தில் நடத்திய இசைப்பரிசோதனையின்போது நிலையத்தார் அனுஷ்டித்த தவருன முறையினுல் பல கலைஞர்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்தது.

**மறுமலர்ச்சி மன்றம்**

மருதமுனை மாணவர் மறுமலர்ச்சி மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் சமீபத்தில் ஆசிரியர் ஜனுப் ஏ எஸ். எம் அப்துல்லா தலைமையில் நடைபெற்றது.

மேற்படி மன்றத்தின் நிரந்தரத் தலைவராக தலைமை ஆசிரியர் ஜனுப் ஏ. எம். சரீப்தீனை தேர்ந்தெடுக்கப்பட்டது.

**கல்லோயா அதிகாரிக்கு பிரியாவிடை**

கல்லோயா அபிவிருத்திச்சபை மண்டூர் டிவிஷனில் பிரதம வெளி வேலை அதிகாரியாக இருந்து 1-11-52ல் உதவி என்ஜினியராக உத்தியோக உயர்வு பெற்று உகணைக்கு மாறிச் செல்லும் ஜனுப் பி அப்தீன் அவர்கட்கு இரவுக்காவல்காரர்கள் சார்பாக திரு சிதம்பரம்பிள்ளை டி. ஏ. அவர்களால் ஒரு பிரிவுபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

**பதுளை தி. மு. கழகம்**

பதுளை திராவட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 16-11-52ல் ஸ்பெரிங் வெளி தோட்டத்தில் திரு ஏ. எம் நாடியான் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பதுளை கிளைக்கழக செயலாளர் திரு ஏ காசிநாதன், திரு எஸ் எம். ஆசைத்தம்பி ஆகியவர்கள் திராவிட முன்னேற்றக் கழக கொள்கைகளை விளக்கிப் பேசினுர்கள்.

**தமிழ் க்ஷேமாபிவிருத்திச் சங்கம்**

பம்டலப்பிட்டி அர்ச் மரியாயின் தமிழ் க்ஷேமாபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் சமீபத்தில் அதன் தலைவர் திரு ஏ பி தம்பிராஜா வயது வந்தவர்களின் பாடசாலை ஒன்றைத் திறந்து வைத்தார்.

சமத்துவ சங்கீதகான நாடக குழுவைச் சேர்ந்த திருவாளர்கள் ஏ. சூசை மாணிக்கம், எஸ் முத்தையா, சூசை ஆகியோர் இன்னிசை அளித்தனர். இறுதியில் சங்க காரியதரிசி திரு எஸ். அந்தோனி எல்லோருக்கும் நன்றி கூறினுர்.

**தாழ்த்தப் பட்டோர் சம்மேளனம்**

இராமநாதபுரம் மாவட்டம் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் இலங்கை கிளையின்பொதுக் கூட்டம் 10-11-52ல் சம்மேளனத்தின் தலைவர் திரு வை. சு சிதம்பரம் தலைமையில் கொள்ளுப்பிட்டியில் நடைபெற்றது.

திருவாளர்கள் க அ. சாமிநாதன், சே. வேலாவடியான், ஆ கருப்பையா, க. மு சுப்பையா, ம ச ஆறுமுகம், வீ சாமிநாதன் தம்பி முதலியவர்கள் பேசினுர்கள்

**மாணவர் தேர்ச்சிச் சங்கம்**

புவாக்பிட்டி றோ' க த. பாடசாலை மாணவர்களால் மார்கழி மாதம் முதல்தேதி மாணவர் தேர்ச்சிச் சங்கம் ஒன்றை உண பிதா யேவி பேட்டின் தலைமையில் நிறுவப்பட்டன.

செல்வன் பெருமாள் "தமிழின் பெருமை" என்பது பற்றியும், செல்வி காளியம்மாள் "பெண் கல்வி" என்பதுபற்றியும் செல்வி பியுலா 'நாடகக் கலை' என்பது பற்றியும் பேசினுர்கள் பின்னர் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

**கண்டி தமிழ்ச் சங்கம்**

மத்திய மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் பேச்சுப் போட்டி ஒன்றும் சங்கீத போட்டி ஒன்றும் 15-11-52ல் கண்டி ஸீ ஸி தமிழ்ப் பாடசாலைமண்டபத்தில் சங்கத் தலைவர் திரு கே. குமாரவேள் தலைமையில் நடைபெற்றது. மத்திய மாகாணத்தின் பல பாகங்களிலும் இருந்த 40 பாடசாலைகளைச் சேர்ந்த 60 மாணவ மாணவிகள் இப்போட்டிகளில் பங்குபற்றினர்.

**ஆசிரிய தம்பதிகளுக்கு விருந்துபசாரம்**

மாத்தளை அரசினர் தமிழ்ப் பாடசாலையில் இருந்து உடட்புவ அரசினர் சிரேஷ்ட பாடசாலைக்கு மாறிச் செல்லும் தலைமை ஆசிரியர் திரு ஐ சு இராமசுவாமி அவர்கட்கும் அவரது பாரியாருக்கும் மாத்தளை விஜயா கல்லூரியில் நகரசபைத் தலைவர் தி ரீ தம்பிராசா தலைமையில் ஒரு விருந்துபசாரம் நடத்தப்பட்டது

விருந்துபசாரத்தின் பின் மாத்தளை நகர மக்களின் சார்பில் உபசாரப் பத்திரமொன்று வாசித்தளிக்கப்பட்டது

**நெடுந்தீவு சனசமூக நிலையம்**

நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையப் பொதுக்கூட்டம் கடந்த 9-11-52ல் மாவிலித்துறைப் பாடசாலையில் நடைபெற்றது அத்தருணம் பின்வரும் உத்தியோகஸ்தர்கள் ரெிதவு செய்யப்பட்டனர் தலைவர்: ஆசிரியர் திரு வி நாகனுதர், காரியதரிசி: திரு கே சதாசிவம், தனுதிகாரி: திரு ஐ நாகலிங்கம், உபதலைவர்: திரு எம் பெனடிற், உபகாரியதரிசி: திரு எஸ் தில்லையம்பலம் கூடிய விரைவில் நிலையத்துக்கு ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது

**பங்களா தொழிலாளர் சங்கம**

அகில இலங்கை பங்களா தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று வெள்ளவத்தையில் திரு ஈ: டப்ளியூ சிரிசேனு தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது.

தோழர்கள் கந்தா, ராஜன், பி. கருப்பையா, பி பெரியசாமி ஆகியவர்கள் திரு ஆனந்தா குணசிங்கம் மேற்படி சங்கத்திற்கு போட்டியாக வேறு ஒரு சங்கத்தை ஆரம்பித்திருப்பதைக் கண்டித்துப் பேசினுர்கள்

**மறுமலர்ச்சி நாடக மன்றம்**

மட்டக்களப்பு 'மறுமலர்ச்சி நாடக மன்றம்' வண்டி ஒழுங்கை 10-ம் இலக்க இல்லத்தில் அமைக்கப்பட்டது மன்றத் தலைவராக திரு சாம் தம்பிமுத்து அவர்களும், செயலாளராக திரு எம் மௌலானு அவர்களும் பொருளாளராக திரு கந்தசாமி அவர்களையும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

**கலாவிருத்திச் சங்கம்**

சங்குவேலி கலாவிருத்திச் சங்க முதலாவது பகிரங்கக் கூட்டம் 2-12-52ல் சங்கத் தலைவர் திரு சி அரசரத்தினம் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமானது

தலைவர் முகவுரைக்குப் பின் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் செல்வி மிதிலாதேவி சின்னதம்பி ஸ்ரீலஸ்ரீ க வடிவேல்சுவாமிகள் ஆகியவர்கள் பேசினுர்கள் சங்கச் செயலாளர் திரு பொ பூபாலசிங்கம் நன்றி கூறினுர்

**சம்மாந்துறையில் வரவேற்பு**

ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு சி டப்ளியு டப்ளியு கன்னங்கரா சமீபத்தில் சம்மாந்துறைக்கு விஜயம் செய்தபோது இங்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது பட்டின சபைத் தலைவர் ஜனுப் அ உ உதுமாலெவ்வை மந்திரியை வரவேற்றுப் பேசினுர்

---

தேசபக்தர் கென்யாட்டாவழக்கு

## உலக வழக்கறிஞர்கள் வாதாடுகின்றனர்

## இலங்கை கியூ. ஸி. ஒருவரும் ஆஜராகலாமே!

ஆபிரிக்காவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிமை நாடுகளில் ஒன்றுதான் கெனியா. சுதேசி மக்களின் நிலங்களை எல்லாம் வெள்ளையர்கள் பிடுங்கிக்கொண்டதால் சுதேசிகளின் நிலப் பசி எல்லை மீறிவிட்டது. இன்று கென்யா மக்கள் கொந்தளித்தெழுந்து வீரசுதந்திரப்போர் நடத்துகின்றனர். வெள்ளையர்களை ஒழித்துக்கட்டுவதற்காக கிகுயூ என்ற வகுப்பினர் 'மாவ் மாவ்' என்ற இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றனர். சரித்திரம் கண்டிராத காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளை அள்ளி வீசி, மிருகங்களைப் போல அவர்களைச் சித்திரவதை செய்கின்றனர் ஏகாதிபத்தியவாதிகள்.

கெனியாவின் மாபெரும் தேசியத் தலைவரான ஜோமோ கென்யாட்டா 'மாவ் மாவ்' இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டு கோர்ட்டில் நிறுத்தப்பட்டிருக்கிறுர். இந்த வழக்கு உலகப் புகழ்பெற்ற சர்வதேசிய வழக்காகிவிட்டது. நீதிமன்றத்தில் கென்யாட்டா சார்பாக வாதாடுவதற்காக இந்தியாவிலிருந்து திவான் சமன்லாலும் (எம் பி) சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞர் டி என். சேத்தியும் சென்றிருக்கிறுர்கள்' மேலும், அவர் சார்பாக ஆஜராவதற்காக நய்ஜீரியாவிலிருந்து கோலா பாலோகன் என்ற பிரபல வழக்கறிஞரும் கோல்ட் கோஸ்ட்டிலிருந்து ரொபினு ஹேஸியா என்ற சட்ட நிபுணரும் கெனியாவுக்குச் சென்றுர்கள். ஆயினும் கெனியாவுக்குள் நுழைய அந்நாட்டு ஆட்சியாளர் அவர்களை அனுமதிக்கவில்லை, அவர்கள் கறுப்பு நிறமுடைய சுதேசிகளாக இருப்பது அதற்குக் காரணமாகஇருக்கலாம்.

ஆயினும் பிரிட்டனில் பிரபல வழக்கறிஞரான டி. என். பிரிட் கியூ ஸி இச் சர்வதேசிய வழக்கில் ஆஜராகி கென்யாட்டா சார்பில் வாதாட அனுமதிக்கப்பட்டிருக்கிறுர்' காரணம் கியூ ஸி களுக்கு காமன்வெல்த்தைச் சேர்ந்த எந்த நாட்டிலும் வழக்குகளுக்கு ஆஜராக முடியுமென்று கருதப்படுவதுதான். அப்படியானுல் இலங்கை கியூ. ஸி. களுக்கும் கெனியா வழக்கில் ஆஜராவதற்கு தடை இருக்க முடியாது.

ஆதலால் கெனியா நாட்டின் தலைசிறந்த தேசபக்தர் கென்யாட்டா சார்பில் ஆஜராகி வழக்காட இலங்கையிலிருந்தும் பிரபல கியூ ஸி ஒருவரை அனுப்புதல் சாத்தியமா என்பதை ஆராய்ந்து பார்த்தல் நன்று.

---

## சங்கப் பலகை

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்டார். அவருடைய வாழ்க்கைச் சரிதம் தெளிவாகவும் கச்சிதமாகவும் இந்நூலில் விளக்கப்பட்டிருக்கிறது.

ஆரம்பம் முதல் கடைசி வரை காட்டாற்று வெள்ளம்போல பாயும் விறுவிறுப்பான நடை. வாசிக்கும்போதே உள்ளத்தில் விடுதலை உணர்ச்சியைப் பொங்கச் செய்யும் கனல்கக்குப் சொற்கள், பெரிய எழுத்து, உயர்ந்தரக தாள், சிறந்த பதிப்பு—மாதிரி வினுக்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களுக்கு நாட்டுப்பற்று ஏற்படுத்தும்பொருட்டு இதனைப் பாடப் புத்தகமாக வைக்கலாம் —முகரா.

ஒளியிற் சிறந்தது
சூரிய பிரகாசம்
பீடியிற் சிறந்தது
கமலா பீடியே

கமலா, லீலா பீடிகளும் பீடிக்குத் தேவையான நாகப்பூர், சிங்கறணி இலைகளும், ஆக்கூழ் நிந்பாணிபுகையிலைகளும் சகாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. அவசியம் கவனிக்கபபடும்.

கமலா ஸ்டோர்ஸ்

Propriator: S. V. பொன்னம்பலம்
15, செட்டியார் தெரு கொழும்பு.
போன் 3597. தந்தி; தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிங்ஸ்லி வெம்பிளி வெல்லிங்டன் வெல்லிங்டன்

[கொழும்பு] [கண்டி] [யாழ்ப்பாணம்] [திரிகோணமலை]

# சபயர் (வெள்ளவத்தை)

(17ம் திகதி புதன் வரையும்)

# மகத்தான இரண்டாவது வாரம்!

கருணாநிதியின் கற்கண்டு வசனம்

குமாரி கமலாவின் குதூகல நடனம்

வஸந்தகுமாரியின் கானக் குரலிசை

பாரதியாரின் பண்மிகு பாடல்

இவை

இபபடத்தின் மறக்க முடியாத

அம்சங்கள்

## கருத்தாழமும் கதையழகும் கொண்ட படம்

தின்னத்தின்ன இனிக்கும் ஆனால் தெவிட்டாது

இதுதான் கதையின் உயர்ந்த லக்ஷணம்

## பாருங்கள்! கேளுங்கள்! மகிழுங்கள்!

# பராசக்தி

## மைலனில்:

### நௌஜவான்

நளினி ஜெயவந்த் - பிரேம் நாத் நடித்தது.

## காமினியில்:

சர்க்கஸ அரங்கத்தில்

[ரஷ்ய சர்க்கஸ் படம்]

நடிகர்கள்:

சிவாஜி கணேசன்,

எஸ. வி. சகஸ்ரநாமம்,

டி. கே. ராமச்சந்திரன்,

ஸ்ரீ ரஞ்சனி,

சுசீலா,

முத்துலக்ஷ்மி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 16மேம் இலக்க இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ்பேப்பர்